# புதுக்கோட்டை ஸமஸ்தான
# தேசிய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1945-ம் ௵ ஜூன் ௴ 11௳ திங்கட்கிழமை [ந. 251


தேசிய யுத்த முன்னணி விஷயங்களைப் பற்றிய கட்டுரைகளை பத்திராதிபர் அன்புடன் வரவேற்கிறார். அக்கட்டுரைகள், தகுதியுள்ளவைகளாக இருக்கும் பக்ஷத்தில், கட்டுரை ஆசிரியரின் பெயருடன் வெளியிடப்படும். கட்டுரைகள் சுருக்கமாக இருக்கவேண்டும்; ஒரு வாரத்திற்கு முன்னதாகவே அனுப்பவேண்டும்.

பிரஸங்கம் CCLI.

## பிரிடிஷ் அயல்நாட்டு நடவடிக்கைகளுக்கு மூலாதாரங்கள்.

### பிரிடிஷ் ருஷ்ய ஒப்பந்தத்தின் முக்கியத்வம்.

(டைம்ஸ் பத்திரிகை).

பொதுத் தேருதல் நிர்வாகத்தின் ஒரு இலாகா சம்பந்தப்பட்டமட்டில் கண்காணிப்பும் பொறுப்பும் நின்றுவிடும்படி செய்துவிட முடியாது.

சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டிலிருந்து திரும்பிவந்துள்ள மிஸ்டர் ஈடன் ஐரோப்பாவில் யுத்த நிலைமையிலிருந்து சமாதான நிலமைக்கு வரவேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டிய முறையில் பிரிடனின் அயல்நாட்டு நடவடிக்கைகளை மாற்றியமைக்கும் பிரச்னையை கவனிக்கவேண்டும். குறிப்பாகச் சொன்னால் யுத்த நிலமையிலிருந்து சமாதான முறைக்கு மாறுவது மிகவும் முக்கியமானது. புனருத்தாரண திட்டங்களும் நாசத்திற்குறிய திட்டங்களும் ஏற்பாடு செய்யப்படவேண்டும். ஆகிலும் திடீரென்று மாறுதல் ஏற்படுவதற்கு இரண்டு சூதாவடைகள் இருக்கின்றன. முதலாவதாக முன்னெச்சரிக்கையும், தண்டனையுமுள்ள நடவடிக்கைகள் எதிரியின் பிரதேசத்தில் சில காலம் வரையில் கையாளப்பட வேண்டும். அதே சமயத்தில் புனருத்தாரண, உலக சீர் திருத்த திட்டங்களும் நிறுவப்பட வேண்டும்.

இரண்டாவதாக யுத்தத்துக்காக அமைக்கப்பட்ட சர்வதேச ஒன்றுபட்ட நடவடிக்கை சமாதான காலத்திலும் தொடர்ந்து நடைபெறவேண்டும். சமாதானத்தின் ஸ்தைரியத்தை அந்த ஒன்றுபட்ட நடவடிக்கைதான் ஊர்ஜிதப்படுத்தி உத்தரவாதம் செய்யக்கூடும். அமைப்பில் மாறுதலிருந்தாலும் முறைகளில் வித்தியாசமில்லாமல் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும். பிரிடன் சம்பந்தப்பட்டமட்டில், யுத்த காலத்திய வெற்றிகரமான தந்திரத்திற்கு அஸ்திவாரக் கல்லாகயிருந்த, அமெரிக்க, ருஷ்ய நாடுகளுடன் நெருங்கிய நட்பும் ஒத்துழைப்பும்தான் சமாதான கால மாறுதலுக்கும் பிரிடனின் அயல்நாட்டுக் கொள்கையின் அடிப்படையாக இருக்கவேண்டும்.

உலகம் பூராவிலுமுள்ள, இங்கிலிஷ் பாஷையைப் பேசும் மக்களைப் பிணைத்துவரும் பொதுவான ஐதீகம், பொதுவான அக்கரை என்ற பாந்தவ்யங்களின் வலிமை அச்சுக்கூட்டாளிகளில் எஞ்சியுள்ள நாட்டைத் தாக்குவதில் காணக்கூடிய சோர்வற்ற ஊக்கமுள்ள பொது

வான போரின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. பிரிடிஷ் கொள்கையின் ஒவ்வொரு அம்சத்துக்கும் இந்த ஒற்றுமையை வளர்ச்சிப்பது அத்தியாவசியமானது. அகில பிரிடன் உலக வல்லரசென்பதுடன் ஐரோப்பிய வல்லரசும்கூட ஐரோப்பாவிலிருந்து அது தனித்திருந்தது விஞ்ஞான சாஸ்திரத்தின் முற்போக்கினால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. தீவாக உள்ள அதன் தன்மை இன்னும் விலை மதிக்கக்கூடாததாகயிருந்தாலும், அது தனிப்பட்டு பத்திரமாக இனிமேல் இருக்கமுடியாது. மேலும் அதன் பத்திரத்துக்கு அவசியமான உதவிப் படைகளை பிரிடன் இனிமேல் ஐரோப்பாவுக்கு வெளியிலுள்ள நாடுகளிலிருந்து மட்டும் பெற முடியாது.

ஐரோப்பாவின் பொதுப்படையான ஸ்தைரியமும், பத்திரமும், அமெரிக்கா கவலைப் படக்கூடிய விஷயங்கள். பிரிடனுக்கும் ருஷ்யாவுக்கும் உள்ள பலமான, உருவான சம்பந்தங்கள் பிரிடிஷ் அமெரிக்க ஒப்பந்தத்துக்கு உபபலம் போன்றவை.

பிரிடிஷ் அயல்நாட்டுக் கொள்கைக்கு இரண்டாவதான, முக்கியத்வமுள்ள மூலாதாரம் ருஷ்யாவுக்கும் பிரிடனுக்குமுள்ள ஒப்பந்தம். இதுதான் யுத்தத்தில் வெற்றி பெறுவதற்கு அத்தியாவசியமாக இருந்தது. இது ருஷ்ய பிரிடிஷ் ஒப்பந்த மூலமாக உருவாக்கப்பட்டு, மூன்று வருஷங்களாக அமுலிலிருந்து வருகிறது. இந்த ஒப்பந்தம் ஐரோப்பாவில் பிரிடிஷ் கொள்கையின் லக்ஷியங்களைப் பூர்த்தி செய்து விடாதென்று சொல்லத்தேவையில்லை. முக்கியமாக இப்பொழுது உள்ள நிலைமை, பிரிடன், பிரான்ஸ், மேற்கு ஐரோப்பாவிலுள்ள நாடுகள் முதலியவற்றிற்குள் இதற்கு முன்னிருந்ததைவிட சிலாக்கியமான முறையில் ராஜீய, பொருளாதார ஒத்துழைப்பு ஏற்பட தகுதியுள்ள சந்தர்ப்பங்களை அளிக்கிறது. ஆகிலும் பிரிடனுக்கும் ருஷ்யாவுக்குமுள்ள ஒப்பந்தம் அவசியமாக தொடர்ந்து இருக்கவேண்டும். அவ்விதம் இல்லாவிடில் வரையறுக்கப்பட்ட அல்லது பிரதேச ஒப்பந்தங்கள் அர்த்தமற்றதாயும் பிரயோஜனமற்றதாயும் ஆகிவிடும். வெற்றிக்கு கூட்டு முயற்சிதான் காரணம் என்பது போல, கூட்டு முயற்சியைத் தொடர்ச்சியாக பரிபாலிப்பதுதான் ஐரோப்பாவில் சாச்வதமான ஏற்பாட்டைச் செய்ய நம்பத் தகுந்த, மதிக்கத் தகுந்த அடிப்படையாகும். பிரிடனும் ருஷ்யாவும் தங்களுடைய ஸ்தானங்களிலிருந்துகொண்டு கண்காணிப்புச் செய்து வருவதுடன், அவர்களுக்குள் நம்பிக்கையும் ஒத்துழைப்பும் பலமாக நிலைபெற்று வந்தால் ஐரோப்பாவில் சமாதானம் நிச்சயமாக நிலவும். இஷ்டப்பட்டாலும் பிரிடனும் ருஷ்யாவும் அவர்களிடையே பிளவும் சச்சரவும் உண்டாகக்கூடிய கொள்கைகளை வெகுகாலம் கடைப்பிடிக்கமுடியாது. அவ்விதம் செய்து வந்தால் அந்தந்த நாட்டின் தேசீய அக்கரைக்கு தீங்கு ஏற்படுவதுடன் ஐரோப்பாவின் பொதுவான அக்கரையையும் வித்தியாசங்கள் பாதித்துவிடும். பிரிடிஷ் உற்று நோக்காளருக்கு ருஷ்யாவின் கொள்கைகளும் எண்ணங்களும் ஒருவர் மற்றொருவரின் அபிப்பிராயங்களை அறிந்துகொள்ளக்கூடாமலும் பரஸ்பர நம்பிக்கையை, வளர்ச்சி செய்யாமலும் புதிர் போல் மறைமுகமாக இருக்கின்றனவென்று தோன்றுகின்றன. விவகாரத்துக்குட்பட்ட பிரச்னைகள் சம்பந்தமாக தகவல்களையும் அபிப்பிராயங்களையும் ராஜ தந்திர முறையில் பரிமாரிக்கொள்ளுவதிலும் ருஷ்யா பகிரங்கமாக அவைகளை வெளியிடவில்லை என்று புகார் செய்வதற்கும் முகாந்திரம் இருக்கிறது. இந்தக் கூடமான மனப்பான்மை ருஷ்யாவின் முறைகளையும் லக்ஷியங்களையும் பற்றிய சந்தேகத்தை அனாவசியமாக பலப்படுத்துகின்றது. மேலும் வித்தியாசங்களை மிகைப்படுத்தி, முக்கியமாக ஒற்றுமை அக்கரையுள்ளதை மறந்தும் இருக்கும் சிலரின் கக்ஷியை பலப்படுத்துகின்றது.

இருதரப்பாரின் தலைவர்களிடம் ஒப்பந்தத்தை உண்மையென்றும் உபயோகமுள்ளதென்றும் காட்டுவதற்கான தனிப்பட்ட மன உறுதியை ஒருவரும் சந்தேகிக்கவில்லை. இந்த ஊக்கம் கிரைமியாவிலும் விசேஷமாக ஊர்ஜிதம் செய்யப்பட்டது. ஆகிலும் சிரமங்கள் உண்மையானவைதான். யுத்தத்துக்குப்பின் சரிப்படுத்திக்கொள்ளவேண்டிய சில மாதங்களில் வித்தியாசங்கள் எதிர்பார்க்கப்படவேண்டியவைதான். தலைமை ராஜதந்திரிகள் பேசுவதற்கு இடையிலுள்ள நீண்ட காலங்களில் யதார்த்தமாகவும், தொடர்ச்சியாகவும் அபிப்பிராயங்களை பரிமாரிக்கொள்ள ராஜதந்திரமற்ற உத்தியோக வட்டாரங்கள் முயன்று வரவேண்டியது அத்தியாவசியமாகும். அவ்விதம் செய்தால்தான் குறிப்பிட்ட அளவுக்கு வித்தியாசங்கள் இருந்துவரும். அந்த வித்தியாசங்களும் பொதுவான அக்கரையில் முக்கியமான அஸ்திவாரங்களையும் அறுத்துவிடாமல் தடுக்கப்பட்டுவிடும்.

கிரைமியா மகாநாட்டில் மூன்று வல்லரசுகளின் மந்திரிகளும் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒரு முறை கூடிப்பேசவேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. முதலாவது கூட்டம் சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டிற்குப்பின் லண்டனில் கூட்டப்படும்.

மிஸ்ட்டர் சர்ச்சிலும் ஜனாதிபதி ட்ருமனும் மூன்று வல்லரசுகளும் கூடிய சீக்கிரத்தில் கூடிப்பேசுவார்களென்று வெளியிட்டிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்ட கூட்டங்கள் இனிமேல் தாமதப்படக்கூடாதென்பது விரும்பத்தக்கதாகும். தோல்விபெற்ற ஜெர்மனி பொதுவான நடவடிக்கை மூலம் தீர்த்துவிடக்கூடிய அநேக பிரச்னைகளை உண்டுபண்ணிவருகிறது.

---

## வார யுத்தச் செய்திகள்.

### (A)-முக்கியமான சம்பவங்கள்.

| | |
|---|---|
| 30—5—45 (புதன்கிழமை). | அமெரிக்கர்கள் ஆகினாவாவில் ஜப்பானியத் தற்காப்புகளை ஊடுருவிச் சென்றார்கள். |
| 31—5—45 (வியாழக்கிழமை). | டிகாலி ஸிரியாவில் சுடுவதை நிறுத்தும்படி உத்தரவிட்டார். தென்கிழக்கு ஆசியா கமாண்ட் பிரிடிஷ்மயமாகிவிட்டது. |
| 3—6—45 (ஞாயிற்றுக்கிழமை). | அமெரிக்கர்கள் தெற்கு ஆகினாவாவில் சீனன் தீபகற்பத்தைத் துணித்துவிட்டார்கள். |
| 6—6—45 (புதன்கிழமை). | பிரேஸிஸ் ஜப்பான் பேரில் போர் தொடுத்தது. |

### (B)-செய்திச் சுருக்கம்.

**ஐரோப்பா.**—(1) யூமேயில் இதாலிய கொரில்லாப் படைகளுக்கும் மார்ஷல் டிடோவின் படைகளுக்கும் போர் மூண்டது என்று சொல்லப்படுகிறது.

(2) பாரசிக வளைகுடா வழியாக அனுப்பப்பட்ட அமெரிக்க யுத்த சர்ப்பராக்கள் ஜூன் மாதம் 1 தேதி நடுராத்திரி முதல் நின்றுவிட்டன.

(3) மே மாதம் 28-ம் தேதி நடு ராத்திரி முதல் போர் புரியாதவர்களுக்கு அனுப்பப்பட்ட சாமான் கப்பல்கள் நின்றுவிட்டன. அது முதல் கப்பல்களில் பூர்ணமான வெளிச்சம் ஏற்றப்படும்.

**லெவாண்ட்.**—பிரிடிஷாரின் சிபார்சுக்கிணங்க பிரெஞ்சுக்காரர்கள் சுடுவதை நிறுத்திக் கொண்டார்கள்.

**பஸிபிக்.**—(1) ஆகினாவாவுக்கான போர் கடைசி கட்டத்தை அடைந்தது. சினன் தீபகற்பம் துணிக்கப்பட்டது. நாகாகுஸுகன் விரிகுடா திறக்கப்பட்டுவிட்டது. ஆகினாவாவைச் சேர்ந்த ஒகார்வா தீபகற்பத்தில் படைகளிறங்கின. நாகாத்துறைமுகத்தின் மத்தியிலுள்ள ஓனோயாமாத் தீவை அடைய பாலங்கள் தயார் செய்யப்படுகின்றன. நாகா விமானதளம் பூராவும் அமெரிக்க வசமாகிவிட்டது. தெற்குக் கோடியிலுள்ள 25 சதுர மைல்கள் கொண்ட பிரதேசம்தான் ஜப்பானியர்கள் வசமிருந்து வருகிறது.

(2) பிலிப்பைன்ஸிலுள்ள மிண்டானோத் தீவில் முன்னேற்றம் இருந்துவருகிறது.

(3) போர்னியோவில் தாரகானிலுள்ள மார்கேல் பிடிபட்டது. பிரிடிஷ் வடக்கு போர்னியோவின் தலைநகரமான சாண்டகேயி தாக்கப்படுகிறது.

**சைனா.**—குவாங்ஸி பிரதேசத்தில் ஜப்பான் பின்வாங்கி வருகிறது. சீனர்கள் தெற்கு சைனாவுக்கும் இந்தோ சைனாவுக்கும் மத்தியிலுள்ள ஜப்பானிய தெற்கு இடைவெளியைத் துணித்துவிட்டு, பிண்டாங்க், சூலோ, சியங்கியாங், டியன்ஹோ, லோக்சர்க், யங்க்ஷியன் முதலியவற்றைப் பிடித்தார்கள்.

**பர்மா.**—ஜப்பானியப் படைகள் பெகுவுக்கு சமீபத்தில் சிட்டாங்க் நதியை மறுபடியும் திரும்பித் தாண்ட முயன்று வருகின்றன.

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில் பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

**30—5—45.** (புதன்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியத் தற்காப்புகள்.—தென் ஆகினுவா (Southern Okinawa).

**பர்மா (Burma).**

கடற்படை தளங்கள்.—ஸிதாஹிப் (Sitahip).
பாலம், சேமிப்புகள்.—பாங்காக், சிங்கப்பூர் (Bangkok-Singapore) ரயில்வே.

**31—5—45** (வியாழக்கிழமை)

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

ஜப்பானியப் படைகள்.—பெகு (Pegu)வின் வடமேற்கு.

**1—6—45.** (வெள்ளிக்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய ஆர்சனல்.—ஒஸாகா (Osaka).

**பர்மா (Burma).**

கடற்படை தளங்கள்.—ஸிதாஹிப் (Sitahip).
ராஜபுரி ரயில்வே தளங்கள்.—பாங்காக் (Bangkok), சிங்கப்பூர் (Singapore).
துருப்பு முகாம்கள்.-மோல்மீன் (Moulmein).

**2—6—45** (சனிக்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்.—குயுஷு (Kyushu).

**பர்மா (Burma).**

துருப்பு பிரதேசங்கள்.—தாழி (Thazi), ஸியாம் (Siam) தப்பும் ரஸ்தாக்கள்.

**3—6—45.** (ஞாயிற்றுக்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East.)**

ரயில் லயன்கள் விமான நிலயங்கள்.-குயுஷு (Kyushu).

**பர்மா (Burma).**

எதிரி விமான நடவடிக்கைகள் இல்லை.

**4—6—45.** (திங்கட்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

இலக்குகள்.—ஹொன்ஸு தீவிலுள்ள கோப் (Kobe).

**பர்மா (Burma).**

ஒரு தகவலும் இல்லை.

**5—6—45.** (செவ்வாய்க்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானியத் தற்காப்புகள்.—தெற்கு ஆகினுவா (Southern Okinawa).

**பர்மா (Burma).**

கால நிலையை உத்தேசித்து எதிரி விமான நடவடிக்கைகள் இல்லை.

**6—6—45.** (புதன்கிழமை)

**தூரக்கிழக்கு (Far East).**

ஜப்பானிய விமான நிலயங்கள் கடற்கரைப் பட்டணங்கள்.—போர்னியோ (Borneo).

**பர்மா (Burma).**

ஒரு தகவலும் இல்லை.

## எதிரி விமானப்படையெடுப்புகளின் விவரங்கள்.

**31—5—45.** (வியாழக்கிழமை) **to 7—6—45.** (வியாழக்கிழமை).

**தூரக்கிழக்கு (Far East).**

ஒரு தகவலும் இல்லை.

**பர்மா (Burma).**

எதிரி விமான நடவடிக்கைகள் இல்லை.

---

# யுத்தக் குறிப்புகள்.

**ஹிட்லரின் ஆக்ஷி ஒழிந்தது.** ஜூன் மாதம் 5-ம் தேதி பிற்பகல் 2-மணிக்கு ஆக்கிரமிப்பு ஜெர்மனியின் நிர்வாகத்துக்காக நேசதேச மேன் பார்வை கமிஷன் நியமிக்கப்பட்டதுடன் வஞ்சகத்தினுலும் பலாத்காரத்தினுலும் ஹிட்லர் அமைத்த மூன்ருவது ரீச் மறைந்தது. ஆஸ்திரியாவும் சுடெடன்லாந்தும் ஜெர்மன் பிரதேசத்திலிருந்து பிரிக்கப்பட்டன. ஜெர்மனி நான்கு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு பிரிடிஷ், ருஷ்ய, அமெரிக்க, பிரெஞ்சு ராணுவத்தலைவர்களின் ஆக்ஷிக்குட்படுத்தப்பட்டு விட்டது. அந்தந்த ராணுவத் தலைவர்கள் அவரவர்களுடைய வட்டாரத்தில் தங்களுடைய தாய்நாட்டு நிர்வாகங்களின் அமுலுக்குட்பட்டு அதிகாரம் செலுத்துவார்கள். ஜெர்மனியின் பொதுவான விஷயங்களை ஆலோசிப்பதற்காக நான்கு கமாண்டர்களுமடங்கிய மத்திய சபை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு ஒவ்வொரு தலைவரும் முறைப்படி தலைமை

வகிப்பார்கள். இவ்விதமாக அதிகாரம் ஏற்றுக்கொண்டதிலிருந்து ஜெர்மனியைக் கவர்ந்து விடுவார்கள் என்று பொருள்படாது. தேசங்களைத் திருத்தியமைத்துக்கொள்ளும் பிரச்னை இன்னும் தீர்க்கப்படவில்லை. இதுவரையில் சரண்புகுந்துவிடாத எல்லா ஜெர்மன் படைகளும் சரணாகதி செய்யவேண்டும். ஜெர்மானியர்கள் நிராயுதபாணிகளாகச் செய்யப் படுவார்கள். எல்லா யுத்த தளவாட உற்பத்தி தொழிற்சாலைகளும் மூடப்படும். ஜெர்மன் தொழிலாளர்கள் சிதைவுற்றிருக்கும் ஜெர்மன் பொருளாதாரத்தைச் சரிப்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

இப்பொழுது அமைத்திருக்கும் நிர்வாகத்தின் தன்மை எவ்விதமென்பதை பிரிடிஷ் வட்டாரத்தின் சேனாதிபதியான பீல்ட் மார்ஷல் மாண்ட்காமரி மே 30-ம் தேதியன்று விளக்கி பிரசுரம் செய்திருக்கிறார்.

“ஜெர்மனியில் பிரிடிஷ் சேனை ஆக்கிரமித்திருக்கும் வட்டாரத்தில் அதிகாரம் செலுத்தவும் அதை ஆளவும் என்னை பிரிடிஷ் அரசாங்கம் நியமித்திருக்கிறது. என்னுடைய ஆக்ஞைப்படி ராணுவ நிர்வாகம் இந்த வட்டாரத்தில் அமுல் நடத்தும்.

“நாடெங்கும் சாதாரணமான ஒழுங்குமுறையுள்ள வாழ்க்கையை அமைப்பதுதான் என்னுடைய முதல்வேலையாகும்.

“முதல்முதலாக ஜனங்களுக்கு உணவுப்பொருளும், வீடும், வியாதியில்லாமல் இருக்கும் சுதந்திரமும் வழங்கப்படும். போக்குவரத்து மார்க்கங்கள் மறுபடியும் அமைக்கப்படவேண்டும். தபால் தந்தி வசதிகள் மறுபடியும் அமைக்கப்படவேண்டும். சில தொழிற்சாலைகள் மறுபடியும் வேலை செய்துவரவேண்டும். இவைகளைப் பூர்த்திசெய்ய ஒவ்வொருவரும் பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டும்.

“சர்வதேச சட்டப்படி யுத்தத்தில் குற்றம் செய்தவர்கள் தகுந்தபடி நடத்தப் படுவார்கள்.

“என்னுடைய ஆக்ஞைப்படி ஜெர்மானியர்கள் ஜன சமூகத்திற்கு வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களைத் தேடிக்கொடுக்கவேண்டும். நாட்டின் பொருளாதார நிலைமையை நிலைநாட்டவும் அவர்கள் உழைக்கவேண்டும்.

“பிரிடிஷ் வட்டாரத்திலுள்ள ஏராளமான ஜெர்மன் ஸோல்ஜர்களும், மாலுமிகளும், விமானிகளும் சில பகுதிகளில் ஒன்று திரட்டப்படுகிறார்கள். ஜெர்மன் சேனையும் மற்ற கவசம்பூண்ட படைகளும் நிராயுதபாணிகளாக்கப்பட்டு கலைக்கப்பட்டுவிடும். ஜெர்மன் ஸோல்ஜர்களும், மாலுமிகளும், விமானிகளும் அவர்களுடைய தொழிலுக்கும் வியாபாரத்திற்கும் தகுந்தபடி பிரிக்கப்படுகிறார்கள். சில நாட்களுக்குள்ளாக அவர்கள் போர்ப்படைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, அவர்களுடைய வேலையைத் துவக்க அனுப்பப்படுவார்கள்.

“இப்பொழுது அத்யாவசியமானது அறுவடைதான். முதலில் விவசாயிகள் விடுவிக்கப்படுவார்கள். அதன்பின் மற்ற தொழிலாளர்கள் அனுப்பப்படுவார்கள்.

“வேலை எவ்விதம் நடைபெறுகிறதென்று ஒலிபரப்பு மூலமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் ஜெர்மன் ஸோல்ஜர்களுக்கும் பொதுமக்களுக்கும் அறிவிக்கும்படி நான் ஏற்பாடு செய்கிறேன். இந்த வேலையை நீங்கள் மனமொப்பி திறமையுடன் செய்வீர்களென்று எதிர்பார்க்கிறேன்”.

வி வி வி வி வி

**ஆக்கிரமிப்பு வட்டாரங்கள்.** இன்னும் இறுதியாக நிர்ணயிக்கப்படவில்லை. பொதுவாகச் சொன்னால் பிரிடன், வடமேற்கு ஜெர்மனியையும், ருஷ்யா, கிழக்கு ஜெர்மனியையும், அமெரிக்கா தென் மேற்கு ஜெர்மனியையும், பிரான்ஸ் மேற்கு ஜெர்மனியையும் ஆக்கிரமிக்கும். ருஷ்யாவின் வட்டாரம் ஜெர்மனியின் பாதிபாகம் கொண்டது. ஆனால் அங்கு ஜெர்மனியின் ஜனத்தொகையில் கால்பாகம்தான் இருந்து வருகிறது. அது பெரும்பாலும் விவசாயம் மிகுந்தபாகம். மேற்கு நேசதேசத்தார்களிடம் உள்ள பிரதேசம் தொழிற்சாலைகளுள்ளது. ருஷ்ய வட்டாரம் லூபக்குக்குக் கிழக்கில் சில மைல்களுக்குப்பின் ஆரம்பமாகும். மாக்டிபர்க், துரிங்கியா, சாக்ஸனி முதலிய இடங்கள் அதில் அடங்கியுள்ளன.

**நாஸிகளின் கீழறுப்பான் வேலை.** ஆக்கிரமிப்பு சேனைகளைக்கண்டு ஜெர்மானியர்கள் அமைதியுள்ளவர்கள்போல் காணப்படுவதிலிருந்து ஜெர்மனியில் நாஸிகளின் செல்வாக்கு நின்றுவிட்டதென்று நினைப்பது தவருகும். சந்தர்ப்பம் வாய்த்தால் குழப்பத்தை உண்டுபண்ண அவர்கள் முயலுவார்கள். மத்திய ஜெர்மனியிலுள்ள ஜெனரல் பிராட்லியின் தலைமை காரியாலயத்திலுள்ள உலக பத்திரத்தலைவர்கள் பலவகைகளில் ஜெர்மானியர் மறைத்து வைத்திருக்கும் ஆயுதங்களையும், யுத்த தளவாடங்களையும், வெடிமருந்துகளையும், முக்கியமான தஸ்தாவேஜுகளையும் கண்டுபிடித்ததாகச் சொல்லுகிருர்கள். இது எதிர்பார்க்கக்கூடியதுதான். இதிலிருந்து ஜெர்மானியர்களின் புத்தி சாதுர்யமும் வெளிப்படுகிறது. ஒரு புதைகுழியைப்பார்த்தபொழுது ஜெர்மன் நடவடிக்கையைப்பற்றி சந்தேகம் கொண்ட நேசதேச ஆக்கிரமிப்பு சேனைகள் அதைப் பரிசோதித்துப் பாரத்தபொழுது அதில் சேனை சம்பந்தமாக உள்ள தஸ்தாவேஜிகள் அடங்கிய 7 பெட்டிகளையும் ஒரு கல் அறைக்குள் வைக்கப்பட்டிருந்த விசித்திரமான சவப்பெட்டியையும் கண்டார்கள். அது அதிக துர்க்கந்த முள்ளதால் அதை ஒன்றும் செய்யக்கூடாதென்று புதைகுழி ஸ்தல டிரெக்டர் சொன்னுர். அதன் பேரில் சந்தேகம் அதிகரித்தது. அதைத்திறந்த உடன் அதில் நாஸி அடையாளங்களும், உடுப்புகளும், கொடிகளும், ஹிட்லரின் உருவப் படமும் காணப்பட்டன. ஜெர்மனியிலுள்ள பண்ணைகளில் சிறிய ஆயுதசாலைகளும் காணப்படுகின்றன. நூரம்பர்க்கில் ஒரு குடியானவன் வீட்டில், உண்மையைச் சொல்லாவிடில் வீட்டை தீக்கிரையாக்கிவிடுவோம் என்று சொன்னமாத்திரத்தில் குடியானவன் வைக்கோல் போரில் ஒரு துவாரத்தை உண்டுபண்ணி, அங்கிருந்த மண்ணைத் தோண்டினுன். அப்பொழுது ஒரு கதவு தென்பட்டது. அதைத்திறந்தபொழுது அங்கு துப்பாக்கிகளும், வெடி மருந்தும், ஆடைகளும் மற்ற முஸ்தீப்புகளும் காணப்பட்டன.

வி வி வி வி வி

**குற்றவாளிகளின் விசாரணை.** பாழடைந்த ஐரோப்பாவை புனருத்தாரணம் செய்யும் வேலை நடைபெறும்பொழுதே ஐரோப்பிய யுத்தக் குற்றவாளிகளை பரிசீலனை செய்யும் நடவடிக்கையையும் நேசதேசத்தார்கள் கையாண்டு வருகிருர்கள். ருஷ்யர்கள் இதை துரிதமாக நடத்த வேண்டுமென்று துடித்துக்கொண்டிருக்கிருர்கள். மேற்கு வல்லரசுகளுக்கும் இதில் அக்கறை குறையவில்லை. அவசரப்பட்டு ஆலோசனைக் குறைவுள்ள காரியங்களைச் செய்யக்கூடாதென்று அவர்கள் நினைக்கிருர்கள். நியாயாதிபதிகளின் வேலையும் சுலபமானதல்ல. பலவிதமான யுத்தக் குற்றவாளிகள் இருக்கிருர்கள். ஹிட்லர் ஒரு தனிப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன். அவன்தான் பெரிய குற்றவாளி. அவன் இறந்துவிட்டாலும், இல்லாவிட்டாலும் அவனில்லாமலே நோட்டீஸின் பேரில் அவன் பேரில் விசாரணை நடத்தப்படும். பிரான்ஸில் ராஜத்துரோகியான லவால் "ஒத்துழைத்தவன்" என்று இப்பொழுது சொல்லுகிருன். ஸ்பானியர்டுகள் அவனை நேசத் தலைவர்களிடம் ஒப்புவித்துவிடுவதாகச் சொல்லிவிட்டார்கள். குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்க அவன் தயார் செய்துவருகிருன் என்று சொல்லப்படுகிறது. அடுத்தபடி ருஜுத் தேவையில்லாத குற்றங்களைச் செய்த கோயரிங்கும், டோனிட்ஸும், ரோஜன்பர்க்கும் இருக்கிருர்கள். அவர்களையும் விசாரணை செய்து தண்டனைக்குள்ளாக்கவேண்டும். குற்றங்கள் சர்வதேச சம்பந்தமுள்ளவையாகையால் சர்வதேச நியாயஸ்தலம் அமைக்கப்பட வேண்டும். அடுத்தபடியாக ராஜத்துரோகிகளான அமெரிக்க எஸ்ராபவுண்டும், பிரிடிஷ் ஹாஹா பிரபுவும் அந்த அந்த நாட்டாரால் விசாரணை செய்யப்படவேண்டும். கடைசியாக, ஜெர்மன் ராணுவ காரியாலய சிப்பந்திகளும் மற்ற ராணுவ கடற்படை விமானப்படை ஆபீஸர்களும் பரிசீலனை செய்யப்பட்டு, தூக்கிலிடுவதோ, தேசப்பிரஷ்டம் செய்வதோ, காவல் தண்டனை முதலிய தண்டனைக் குட்படுத்தப்படவேண்டும். மனித வர்க்கத்தின் எதிர்கால உலக பத்திரத்தை உத்தேசித்து கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.

வி வி வி வி வீ

**சான்பிரான்ஸிஸ்கோ.** உலக பத்திர மகாநாடு கால அட்டவணையை ஒத்து நடைபெற வில்லை. பிரதிநிதிகள், தர்மகர்த்தா முறை, பிரதேச ஒப்பந்தங்கள் முதலிய பிரச்னைகளை மறுபடியும் கிளப்பி சர்ச்சை செய்யவேண்டுமென்று நினைக்கிருர்கள். பாலஸ்தீனத்திற்குள் யகூதிகள் நுழையும் பிரச்னை மறுபடியும் தோன்றிவிட்டது. சுயேச்சைக்கும் சுய நிர்ணயத்துக்கும் இடையே சச்சரவு உண்டாகி விட்டது. மாஸ்கோவிலும், லண்டனிலும் விவரங்களை நேர்முகமாக சர்ச்சை செய்வதற்காக ஜனதிபதி ட்ருமென், மிஸ்ட்டர் டேவிஸ்ஸையும், மிஸ்ட்டர் ஹாரிஹாப்கின்ஸையும்

அமெரிக்க பிரதிநிதிகளாக அனுப்பியிருக்கிறார். இதே சமயத்தில் ருஷ்ய பிரதிநிதியான M. A. A. சோபாலெவ் திடீரென்று திரும்பி அழைக்கப்பட்டிருக்கிறார். உலகபத்திர கௌன்ஸிலின் வேலையில் எந்த கூட்டத்திலும் அதை நிராகரிக்க பெரிய வல்லரசுகளுக்கு உரிமை உண்டென்ற சிக்கலான பிரச்னை சம்பந்தமாக ஐந்து வல்லரசுகளும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்கள் என்று கடைசியாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

வி வி வி வி வி

**ஸிரியா.** ஸிரியாவில் பிரிடிஷ் துருப்புகளின் நடவடிக்கையினால் நிலைமையில் அபிவிருத்தி காணப்படுகிறது. பிரெஞ்சுக்காரர்கள் கலகத்தை நிறுத்தும்படி உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்குள் உயிர்ச்சேதம் ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது சச்சரவு செய்துவரும் பிரான்ஸ், ஸிரியா, லெபானன் முதலிய நாடுகளின் பிரதிநிதிகள் உலக சமாதானத்தை நிறுவ உத்தேசித்து நடைபெறும் மகாநாட்டில் கலந்துகொண்டிருக்கிறார்களென்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் கெடுதலான பாகம் யாதெனில் மிஸ்டர் சர்ச்சில் எச்சரிக்கை செய்தபோதிலும் லெவாண்டின் கலவரத்துக்கு பிரிடன்தான் காரணமென்று டிகால் அவதூறு சொல்லி மத்தியக்கிழக்கு பிரச்னையைத் தீர்க்க ஐந்து வல்லரசு மகாநாடு கூட்டப்படவேண்டுமென்றும் சொல்லுகிறான். இதே சமயத்தில் கெயிரோவில் கூடியிருக்கும் அராபிய சமஷ்டி சபை ஸிரியாவிலிருந்து எல்லா பிரெஞ்சு துருப்புகளும் வெளியேறவேண்டுமென்று வற்புறுத்துகிறது. டமாஸ்கஸ்ஸின் நகர பரிபாலன சபை மே மாதம் 29-ம் தேதியை துக்கமான நாளாகக் கொண்டாடுவதென்றும், பிரெஞ்சுப் பெயர்களுள்ள தெருக்களின் பெயர்களை மாற்றிவிடுவதென்றும், டமாஸ்கஸ்ஸில் பிரெஞ்சு நடவடிக்கையால் உயிர் துறந்தவர்களுக்கு ஒரு ஞாபகச்சின்னம் அமைப்பதென்றும் முடிவு செய்திருக்கிறது.

வி வி வி வி வி

**பாரசீகம் ( இரான் ).** ஐரோப்பிய யுத்தம் முடிந்துவிட்டதினால் இரானிலிருந்து நேசதேசப் படைகளை அப்புறப்படுத்த வேண்டுமென்று இரானிய நிர்வாகம் வேண்டிக்கொண்டிருக்கிறது. 1942-ம் வருஷம் ஜனவரி 29-ம் தேதி ஏற்பட்ட ஒப்பந்தப்படி பாரசிக வளைகுடா வழியாக ருஷ்யாவுக்கு குத்தகைக்கடன் மசோதாப்படி சர்ப்பராக்களை அனுப்ப ஒத்தாசை செய்வதற்காக பாரசிகத்தில் வைக்கப்படும் நேசதேசச்சேனைகள் யுத்த நிறுத்தத்திற்குப்பின் ஆறு மாதங்கள் வரையில் நிலைபெற்றிருக்க வேண்டுமென்று ஏற்பட்டிருக்கிறது. ஐரோப்பியப் போர் முடிந்தபின்னும் ஜப்பானிய யுத்தம் நடைபெறுகிறது. ஒப்பந்தத்துக்கும் ஜப்பானியப் போருக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்று இரானிய நிர்வாகம் வாதாடுகிறது. நேசதேசத் துருப்புகள் வாபஸ் வாங்கப்படும் வரையில் நேசதேசத்தாருடன் எண்ணெய் சம்பந்தமான பிரச்னைகளை சர்ச்சை செய்யவும் அது மறுத்துவிட்டது. இப்பொழுது சீர்கெட்டிருக்கும் பொருளாதார நிலைமையை நேசதேசப்படைகளின் இருப்பு ஒருவாறு அபிவிருத்தி செய்து வருகிறதென்பதை அது மறந்துவிட்டது. நேசதேசத்தார்கள் 50,000 பாரசிகத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியிருக்கிறார்கள். நேசதேசப்படைகள் வாபஸ் பெறப்பெற்றால் துயரம் அதிகரித்துவிடும். பாரசிகத்தின் வேண்டுகோளை கவனிப்பதாக பிரிடன் வாக்குறுதி செய்திருக்கிறது. ருஷ்யாவும், அமெரிக்காவும் அதைப் பரிசீலனை செய்து வருகின்றன.

வி வி வி வி வி

**பஸிபிக் போர்.** டோக்கியோவும் மற்ற ஜப்பானிய நகரங்களும் தினசரி விமானங்களால் தாக்கப்படுகின்றன. ஜப்பானிய நிர்வாகம் சக்ரவர்த்திக்கு தினசரி ஏதாவது மன்னிப்புச்சொல்லிவருகிறது. இவைகள் விமான நடவடிக்கையின் ஆரம்பம். இனிமேல் 2,000 சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் 20,000 டன்கள் மொத்த எடையுள்ள வெடி குண்டுகளை வீசக்கூடும். பெர்லினை ஒரு பொழுதும் விட்டகலமாட்டோமென்று ஜெர்மனி சொன்னது போல ஜப்பானும் சொல்லி வருகிறது. இது வீண் பிதற்றல்.

10 வாரங்களாக நடைபெற்றுவரும் ஆகினாவாப் போர் இப்பொழுது உச்ச நிலைமையை அடைந்துவிட்டது. ஜப்பானியர்கள் கோரமாகப் போரை நடத்துகிறார்கள். ஆகிலும் ஆகினாவா நிச்சயமாக விழுந்துவிடும். தப்பி ஓட வழியன்னியில் ஜப்பானியப் படைகள் தீவின் தெற்குக் கோடியிலுள்ள 25 சதுர மைல்களில் அடைபட்டிருக்கின்றன. ஜப்பானிலிருந்து 350 மைல்களிலுள்ள நாகா விமான தளம் அமெரிக்க வசமாகிவிட்டது. ஜப்பானில்

படையெடுப்பு வெகு சீக்கிரத்தில் ஏற்படலாமென்றும், ஆகினுவா நடவடிக்கைகளிலும் அமெரிக்கப் படைகளை அழிப்பதிலும் உபயோகப்படும் தற்கொலைப் படைகளைப்போல் ஏராளமாகத் தயாரித்து ஜப்பானைத்தற்காப்பு செய்யவேண்டுமென்றும் ஜப்பானியப்பத்திரிகைகளில் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. கடற்தளபதி செஸ்டர் நிமிட்ஸ் சொன்னபிரகாரம் ஆகினுவாவிலுள்ள அமெரிக்க 10-வது சேனை திறமையுடன் போர் புரிந்திருக்கிறது. நியூ யார்க் ஸன் போன்ற அமெரிக்கப் பத்திரிகைகளில் ஆகினுவாப் போரில் அதிக நஷ்டம் ஏற்பட்டது என்று காணப்படும் வியாக்யானங்கள் பொறுப்பற்ற செய்திகள். இந்தப் போரில் ஒரு ஜப்பானிய சேனை பூராவும் அழிக்கப்பட்டது. நேசதேசத்தார்களுக்கு ஜப்பானிலிருந்து 350 மைல்களில் ஒரு முக்கிய தளம் ஏற்பட்டுவிட்டது. இவை தருந்த லாபங்கள் தான்.

அமெரிக்கப் பத்திரிகை அறியாவிட்டாலும் ஜப்பானியர்களுக்கு இந்தப் போரின் அர்த்தம் புலப்படும். ஜப்பானிய விமான இலாகா மந்திரியான குசுகி ஆகினுவாப் போர் முடிவானதென்றும் ஜப்பானின் விதி அப்போரின் முடிவைப் பொருத்ததென்றும் ஒப்புக் கொள்ளுகிருன்.

பஸிபிக்கிலுள்ள அமெரிக்க சேனை இப்பொழுது இருப்பதைவிட இரண்டு பங்காகவும் ஐரோப்பாவிலிருந்ததைவிட அதிகமாகவும் அதிகரிக்கப்படுமென்று ஜனாதிபதி ட்ரூமென் சொல்லியிருக்கிருர். அமெரிக்க விமானப் படையும் அதிகரிக்கப்படும். ஐரோப்பாவிலிருந்து 20 விமானப்படைகள் இங்கு அனுப்பப்படுகின்றன. பர்மாவில் தென் கிழக்கு ஆசியா கமாண்டின் கீழ் வேலைசெய்து வந்த அமெரிக்க விமானப்படையும் ஜப்பானுக்கு அருகிலுள்ள தளங்களுக்குக் கொண்டுபோகப்படும்.

வி வி வி வீ வி

**சைன யுத்தம்.** ஐரோப்பிய யுத்தம் முடிந்தபின் சைனுவிலும் ஜப்பானியப் போர் தற்காப்பு முறைக்கு மாறிவிட்டது. ஜெர்மனியைப்போல் படைகளைச் சிதறவிடால் அவைகளைப் பின்வாங்கி ஒன்று திரட்டி வைக்க வேண்டுமென்று ஜப்பான் எண்ணுகிறது. ஒரு வருஷத்திற்குமுன் ஜப்பான் முன்னேறித் தாக்கி ஹாங்கோ காண்டன் இருப்புப் பாதையைச் சுத்தி செய்தது. சைனுவை இரண்டு துண்டாகத் துணித்தது. ஹெங்கியாங், குவெயிலின், லூசௌ, நான்னிங் போன்ற அமெரிக்க தளங்களைக் கைப்பற்றியது. அது சைனுவின் தலைநகரமான சுங்கிங்கை நோக்கியும் முன்னேறிற்று. மூன்று வாரங்களுக்கு முன்னும் எதிரி இந்தத் தாக்குதல்களைத் துவக்கினுன். இப்பொழுது ஜப்பானின் யுத்த தந்திரத்தில் மாறுதல் காணப்படுகிறது. தெற்குப் பக்கத்தில் முன்னேறிய இடங்களிலிருந்து பின்வாங்கிப் படைகளைத் தற்காப்புக்காகத் தயார் செய்து வருகிறது. சீன கொரில்லாப்படைகளை வெஞ்சௌ, பூசௌ, சுவாடேன் முதலிய துறைமுகங்களை ஆக்கிரமிக்கும்படிக்கும் ஜப்பான் அனுமதித்துவிட்டது. குவாங்க்ஸியின் தலைநகரமும், பழமையான கேந்திரஸ்தானமுமான நானின்கையும் அது விட்டுவிட்டது. விஸ்தாரமான போர் முனையைக் குறுக்கிக்கொண்டு வடக்கு சைனுவில் தற்காப்பு அரணை பலப்படுத்துவதாக உத்தேசித்திருக்கிறது. அங்கிருந்து தெற்கிலிருந்து ஏற்படும் பிரிடிஷ் அமெரிக்கத் தாக்குதலையும் வடக்கிலிருந்து ஏற்படும் ருஷ்யத் தாக்குதலையும் சமாளித்துவிடலாமென்று ஜப்பான் எண்ணியிருக்கிறது. இந்த அபிப்பிராயம் சரியானதென்று வைத்துக்கொண்டால் ஜப்பானியப் போரின் இறுதி கட்டம் வந்துவிட்டதென்று சொல்லலாம். ஐரோப்பாவைப்போல் இரண்டு போர்முனைகள் தூரக்கிழக்கில் ஏற்பட்டால் ஜெர்மனியின் கதிதான் ஜப்பானுக்கும் ஏற்படும். ஜெர்மனியைவிட ஜப்பான் பலமாக எதிர்த்துப் போராடுமென்ருலும் அதுவும் இறுதியில் வீழ்ச்சி பெற்றுவிடும்.

வி வி வி வி வீ

**சில்லரை விஷயங்கள்.** (1) பிரதம மந்திரி பதவியை மார்ஷல் சியாங்கே ஷேக் ராஜீனுமாச் செய்துவிட்டார். மிஸ்ட்டர் T. V. சூங் அப்பதவியை ஏற்றுக்கொண்டார்.

(2) கிரீஸும், பிரஸிலும் ஜப்பானுடன் போர் தொடுத்தன.

(3) கௌதமாலா, ஸால்வடார் என்ற மத்திய அமெரிக்க குடியரசு நாடுகள் ஒப்பந்தப்படி ஒன்றுசேர்ந்துவிட்டன. சிறிய நாடுகள் சமஷ்டியில் சேருவதற்கு இதுதான் முதல் நடவடிக்கை.

# ஐரோப்பாவில் 30 மிலியன் அகதிகள்.

## செஞ்சிலுவை சங்கத்தின் சேவை.

### (டெயிலி டெலகிராப் பத்திரிகை).

ஜெர்மனி எவ்வளவு அகதிகளுக்கும், காணுமற்போனவர்களுக்கும், ஜவாப்புச் சொல்ல வேண்டுமென்பது ஒருவராலும் அறியமுடியாதது. குடும்பங்களுடனும், நண்பர்களுடனும், சேர்ந்துகொள்ளப் பிரியப்படுகிறவர்கள் ஐரோப்பாவில் மட்டும் 30 மிலியன் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மதிப்பிட்டிருக்கிறது. ஜெர்மனி சரண்புகுந்தபின் கிடைத்துவரும் தகவல்களிலிருந்து அகதிகளைச் சொந்த நாட்டிற்கு அனுப்பும் பிரச்னைதான் மகத்தானதென்று தெரியவருகிறது.

சுறுசுறுப்பாக வேலை செய்துவரும் ஸ்தாபனங்களில் செஞ்சிலுவை, ஸெயிண்ட் ஜான் யுத்தஸ்தாபனம் முக்கியமானது. ஜெனிவாவிலுள்ள சர்வதேசசெஞ்சிலுவை சங்கத்தினுடனும், தேசீய செஞ்சிலுவை ஸ்தாபனங்களுடனும், அது அதனுடைய அயல்நாட்டு விவகார இலாகா மூலம் அபாரமான வேலை செய்துவருகிறது. ஐரோப்பாவிலுள்ள அதன் பிரதிநிதிகள் தனிப் பட்டவர்களைக் கண்டுபிடித்து, காணுமற்போனவர்களையும் அகதிகளையும் கணக்கிடுகிருர்கள்.

உதாரணமாக இதாலியில் 10 மாதங்களுக்குள் இந்த நிலயம் 67 பல்வேறு தேசங்களைச் சேர்ந்த 70,000 பேர்களைக் கண்டுபிடித்திருக்கிறது. இந்த நிலயம் மிஸ்ட்டர் தாமஸ் பாரிங்க்டனுல் ஸ்தாபிக்கப்பட்டது. அதன்பின் அவர் பெல்ஜியத்திற்கு மாற்றப்பட்டார். பிரஸ்ஸல்ஸில் அவருக்கு மிஸ் வெலின்பார்க் ஒத்தாசை செய்கிருள். அன்னுருக்கு ஆறு பாஷைகள் தெரியும். அவளிடம் தணிக்கை செய்யப்பட்ட செஞ்சிலுவைச் செய்திகளும், பிரச்னைகளும் அடங்கிய 9 ராத்தல் எடையுள்ள பார்சலிருந்துவருகிறது.

ஆரம்பம் முதற்கொண்டே வேலை அதிகமாக இருந்தது. நான்கு மாதங்களில் 7,000-க்கு மேற்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்டார்கள். அவர்களில் 12 சத விகிதமுள்ளவர்களின் சந்ததி கண்டுபிடிக்கப்பட்டது. 2 சத விகிதம் கண்டுபிடிக்க முடியவில்லை. மற்றவர்களைப் பற்றி விசாரணை நடந்துவருகிறது.

ஒரு அகதிக்கு அல்லது காவலிலுள்ளவருக்கு ஆடையும், ஆகாரமும், சிகிச்சையும் வழங்கப்பட்டபின் அவனுடைய குடும்பத்தாருடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்று அவன் விரும்புகிறுன். குடும்பத்தாரின் விலாசத்தைப்பற்றி ஐந்து வருஷங்களுக்கு முன்னிருந்த ஒரு தகவலை அவன் கொடுக்கிறுன். இப்பொழுதுதான் அயல்நாட்டு சம்பந்த வேலைக்காரர்கள் தோன்றுகிருர்கள்.

முதலில் லண்டனிலுள்ள இலாகாவின் தஸ்தாவேஜிகளிலிருந்தும், அல்லது நேசதேச செஞ்சிலுவை சங்கங்களிலிருந்தும், அல்லது செஞ்சிலுவை விசாரணை நடைபெற்ற ஸ்தாபனங்கள், சங்கங்களிலிருந்தும், அதன்பின் ஜெனிவாவிலுள்ள பிரம்மாண்டமான அட்டவணையுள்ள சர்வ தேச செஞ்சிலுவை சங்கத்தின் மூலமும் விசாரணை செய்யப்படும். ஒரு கேஸையும் தள்ளிவிடுவதில்லை. ஏனெனில் புதிதாகக் கிடைக்கக்கூடிய தகவல்களிலிருந்து அடையாளம் கண்டுபிடித்துவிடலாமென்ற நம்பிக்கையிருந்து வருகிறது.

வீட்டை இழந்தவர்களும், அகதிகளும், தங்களுக்காக இவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்ளப்படுகிறதென்று அறிவதினுல் அவர்களின் மன உறுதி பலப்படுகிறது. மனைவி, குழந்தைகளிடமிருந்து பிரிக்கப்பட்டு அநேக வருஷங்களாகத் தனியே இருந்துவரும் ஒருவனுக்கு அவன் மீண்டும் மனிதனுகிவிட்டான் என்ற அறிவு அவனுக்கு அதிக ஊக்கம் அளிக்கும். அவனுடைய பூரா விவரங்களுமடங்கிய ஒரு செய்தி அவனுடைய கையெழுத்துடன் விளம்பரம் செய்யப்படுவதென்றுல் அது அவனை ஆழ்ந்த யோசனைகளில் ஆழ்த்திவிடுகிறது. ஒரு பெரிய சர்வதேச ஸ்தாபனம் அவனுக்கு ஒத்தாசை செய்ய முன்வந்திருக்கிறதென்று அவன் உணருவான்.

ஒவ்வொரு அயல்நாட்டிலும் பிரிடிஷ் பிரதிநிதிகள் தேசீய செஞ்சிலுவை சங்கத்துடன் ஒத்துழைத்து வருகிருர்கள். தேசீய செஞ்சிலுவை சங்கங்களை ஜெர்மனி ஆக்கிரமிப்பு காலத்தில் சிதைத்திருக்கிறது. பெல்ஜியத்தில் தேசீய செஞ்சிலுவைச் சங்கம் பலமாகவும், திறமையுடனும், ஒற்றுமையுடனும் வேலை செய்துவருகிறது.

அயல்நாட்டு சம்பந்தமான ஸ்தாபனம் தனிப்பட்டவர்களின் குடும்பங்களைத் தேடுவதுடன் நின்றுவிடவில்லை. மேலும் அகதிகளிடம் அக்கரை காட்டிவரும் பிரிடிஷ் அயல்நாட்டு ஸ்தானிகருக்கு அந்த இலாகா ஓரளவு துணிமணிகள், ஆகாரம், விசேஷமான ஆகாரம், பார்சல்கள், வைத்திய மருந்துகள் முதலியவற்றை அகதிகளின் வசதிக்காக வழங்கி வருகிறார்கள்.

அயல்நாட்டு சம்பந்த இலாகாவின் மற்றொரு அம்சத்தையும் இங்கு கூறுவோம். ஒரு வயது முதிர்ந்தவன் அந்த ஆபீஸுக்கு வந்து "என்னுடைய மகனை பிரிடிஷ் விமானி தப்பி ஓடுவதற்கு ஒத்தாசை செய்தானென்று ஜெர்மானியர்கள் சுட்டுக்கொன்றார்கள்" என்று சொன்னான். பிரிடிஷ் விமானி இங்கிலாந்துக்கு பத்திரமாக வந்துவிட்டானாவென்று உற்சாகமடைந்த தகப்பன் அறிய விரும்புகிறான். அதை அறிந்தால் அவனுடைய மகன் வியர்த்தமாக உயிரைத் துறக்கவில்லையென்று அறிந்து அவன் சந்தோஷப்படுவான். விமானி பாராசூட் மூலம் இறங்கி, பிரஸ்ஸல்ஸுக்குக் கால்நடையாகச் சென்று இந்த பெல்ஜிய வாலிபனை சந்தித்தான். வாலிபன் அவனுக்கு பொதுஜனத்திற்குறித்ததான ஆடைகளையும், உணவுப்பொருள்களையும், பொருளையும் கொடுத்து ரயிலில் பிரயாணம் செய்வித்தான். ஒரு வாரத்திற்குப்பின் வாலிபன் கைது செய்யப்பட்டான். அயல்நாட்டு விவகார இலாகா அவனுடைய தகப்பனார் கொடுத்த அற்பமான விவரங்களையும் தகவல்களையும் கொண்டு விமானியைத்தேட முயன்றுவருகிறது.

---

# பிரிடிஷ் ஸோல்ஜரும், ஜெர்மன் ஸோல்ஜரும் ஒப்பிட்டுப் பார்ப்பது.

**S. L. ஸாலன் (நியூஸ் கிராணிகள்).**

## (A)

## போர்முனையிருந்து வந்த பிரிடிஷ் ஸோல்ஜர்.

நீ அவனைக் கண்டு பிடித்து விடுவாய். அவனிடம் மாறுதல்கள் காணப்படுகின்றன. அவன் முன்னைவிட பெரியவனாகவும் ஒரு சிறிது பருமனாகவும் சற்று வயது முதிர்ந்தவனாகவும் காணப்படுவான். அவன் அதிகமாகப் பேசுவதில்லை. இன்னும் கொஞ்ச காலத்திற்கு அவன் அவ்விதம் தானிருப்பான்.

ஒரு வருஷத்துக்கு முன் டி தினத்தன்று ஆர்ன் நதிக்குத் தெற்கில் அவன் சாதாரண ஸோல்ஜராக இருந்தான். 88 விமானத்தின் குண்டுகளால் ஆபீஸரும் மூன்று கமிஷன் பெறாத உத்யோகஸ்தர்களும் கொல்லப்பட்டார்கள். சாமான்களை இறக்கும் கோஷ்டியின் தலைவராக அவன் நியமிக்கப்பட்டான்.

இன்னும் வெடிகுண்டினால் புகைந்து கொண்டிருந்த வேலைத்தளத்திற்குச் சென்றபொழுது அவன் சொன்னான் "இவ்விதமாக வெகுசீக்கிரத்தில் உத்யோக உயர்வு ஏற்படும்" என்று நான் நினைக்கவில்லை.

அவன் அதிக உணர்ச்சியுள்ளவன். ஆனால் அவ்விதம் பிறர் நினைக்கக்கூடாதென்றும் அவன் விரும்புவான். அவனுடைய பையில் அவனுடைய மனைவி, தாயார், பெண் குழந்தைகளைப் பற்றிய ஒளிப்படங்கள் இருக்கின்றன. அகிழ்களில் ஜலத்தில் நனைந்துகொண்டு இருந்தாலும் அவன் ஒளிப்படங்களின் சிறந்தவைகளை பிஸ்கோத்து டப்பியில் அடைத்து நனைந்துவிடாமல் வைத்திருப்பான்.

அவனுக்கு ராஜியத்தைப்பற்றி அதிகம் தெரியாது. ஆகிலும் எந்த ராஜீய வாதியும் அவனை ஏமாற்றிவிட முடியாதென்று அவன் அறிவான். அவனுக்கு சொற்பொழிவுகளைக் கேட்க பிரியமில்லையென்று அவன் சொல்லுவான். ஆகிலும் சந்தர்ப்பம் வரும்பொழுது அவைகளைப் படிப்பான். போர்முனையில் பிரதம மந்திரியின் சொற்பொழிவின் ஓரளவு சக்தியுள்ள ஒருவர் இல்லாத எந்த பிரிடிஷ் படையும் இல்லையென்று நான் நினைக்கிறேன். மனிதர்கள் ஒன்று சேர்ந்து வேலை செய்தால் அற்புதச் செய்கைகளை நிறைவேற்றலாம் என்ற தோற்றம் அவனுக்குப் போரினின்றும் உண்டாகியிருக்கிறது. குடும்ப வாழ்க்கைக்கு அவசியமான முறையில் அவன் தன்னைத் திருத்தி அமைத்துக்கொள்ள முடியாதென்பதைப் பற்றி அவன் கவலைப்படுவதில்லை. அவ்விதம் நடந்து கொள்ளலாமென்று அவனுக்கு நிச்சய

புத்தி உண்டு. அவன் யுத்தத்தை வெறுக்கிறான். ஆகிலும் சேனையில் அவனுக்குப் பிரியமான அநேக விஷயங்கள் இருக்கின்றனவென்று அவன் கண்டுபிடித்து விட்டான். அவன் தாய் நாட்டிற்குத் திரும்பியபின் முதலாவதாக யுத்தத்தினால் ஏற்பட்ட வலுவான நட்புகள் மறைந்து விடுமேயென்று வருந்துவான். இரண்டாவதாக தினசரி ஒழுங்காக உள்ள வாழ்க்கையும் மறைந்துவிடும்.

மிகவும் கஷ்டமான நிலைமையிலும் சௌக்யமாக வாழும் முறைகளை அவன் தெரிந்து கொண்டிருக்கிறான். மழை பெய்யும்பொழுது சாப்பாட்டை அடுப்பில் தயாரிக்கக்கூடிய ஒருவன் புதிய முறைகளை ஏற்றுக்கொள்ள பிரியமில்லாதவனாக இருக்கமாட்டான். யுத்த சமயத்தில் புதிய ஆயுதங்கள் எவ்விதம் மாறுபாடடைந்தனவென்று அவன் கண்டான். புதிய முறைகளின்படி சமாதானத்தை அபிவிருத்தி செய்வதில் அவன் பயப்படமாட்டான். அவனுடைய ஐதிகமான சாந்தகுணத்திற்கு பரிக்ஷை ரூபமான அனுபவமும் சேர்க்கப்பட்டு விட்டது.

இப்பொழுது அமெரிக்கர்களும், பிரிடிஷார்களும் தாராளமாகப் பரிகாசம் செய்து கொள்ளுவதும் உரக்கப் பேசுவதுமாகக் காணப்படுகிறார்களென்றால் அவர்களுக்குள் நெருங்கிய நட்பு ஏற்பட்டிருக்கின்றதென்பதற்கு அத்தாக்ஷியாகும். அவர்கள் போர் என்ற பரிக்ஷையில் மற்றொருவரை அறிந்திருக்கிறார்கள். முதலில் யுத்த அவசியத்தினால் ஏற்பட்ட தொடர்பு என்று எண்ணியதுபோக பரஸ்பர நம்பிக்கை உண்மையான அன்பிலும் நல்லுணர்ச்சியிலும் அடிப்படையாக வேறூன்றி விட்டது.

யுத்தத்தின் மகத்தான தியாகத்தை அவன் அறிவான். அவன் மறக்கமுடியாத அநேக விஷயங்கள் இருக்கின்றன. அவனுடைய ஸ்நேகிதர்கள் ஆபிரிகா, ஸிஸிலி, நார்மண்டி, ஹாலந்து, ஜெர்மனி, ஆர்டெனிஸ், மற்ற அநேக இடங்களில் உயிர் துறந்து விட்டார்கள். ஒவ்வொருவரிடமும் சில ரகசியங்கள் இருந்து வருகின்றன. அவன் திரும்பி வருகிறான். அவனை நீங்கள் கண்டுபிடித்து விடுவீர்கள். அவனிடம் விசேஷ மாறுதல்கள் காணப்படுகின்றன.

## (B)
## ஜெர்மானியரின் குணநிசயம்.
### (F. W. பர்பெக்ட், டெயிலி டெலகிராப் பத்திரிகை).

நான் பிரமர் ஹேவனிலுள்ள ஒரு விடுதியிலிருந்தேன். அது ஒரு சிறிய வீடு. ஆனால் அழகாக இருந்தது. அதன் வாசிகள் 24-மணிகளுக்கு முன்தான் அப்புறப்படுத்தப்பட்டார்கள். ஆகிலும் அவர்கள் வீட்டை நாசம் செய்துவிடவில்லை. அதன் சாமான்களும் மர சாமான்களும் பிரிடிஷ் குடித்தன ஸ்திரீக்கு பொறாமையை உண்டுபண்ணிவிடும். புத்தகங்கள், சிதார், அழகிய கண்ணாடி சாமான்கள், கலா விசேஷங்கள் முதலியவை அந்த ஜனங்கள் உயர் தரமான வாழ்க்கையும் கலை ஞானமும் உள்ளவர்கள் என்று வெளிப்படுத்தின.

என்னையறியாமையிலேயே நான் அங்கு இல்லாத வீட்டு ஸ்வான்தார்களைப்பற்றி நினைக்க ஆரம்பித்தேன். நிச்சயமாக இவர்கள் நல்லொழுக்கமுள்ள ஜெர்மானியர்களாக இருக்க வேண்டும். இவர்களுக்கும் கொடுமை முகாம்களை அமைத்த காட்டுமிராண்டிகளுக்கும் முற்றிலும் வித்தியாசமுண்டு.

ஒரு நாள் விறகுக்காக தேடிவரும் பொழுது நான் ஒரு தாழ்வரைக் கதவைத் திறந்தேன். சுவற்றில் ஒரு கசை காணப்பட்டது. அந்த ரம்யமான வீட்டில் அந்தக்கொடுமையைக் கண்டபொழுது சூர்ய வெளிச்சத்திலிருந்து இருட்டுக்குள் சென்று இருட்டான, கோரமான, கொடிய உலகம் தோன்றியதுபோல் தோன்றிற்று. அதில் ஜெர்மன் குடித்தன ஸ்திரீயின் பெயர் கைப்பிடியில் எழுதப்பட்டிருந்தது. அதிலிருந்து இரண்டு உலகமும் ஒன்றுதான் என்று தோன்றிற்று.

ஜெர்மனியிலிருந்த அடிமை வேலைக்காரர்களை அடிப்பதற்காக இந்தக் கசைகள் ஏராளமாக, தயாரிக்கப்பட்டனவென்று நான் பின்பு தெரிந்துகொண்டேன். பிரெமென் பிரதேசத்தில் இவ்விதான ஆயிரக்கணக்கான கசைகள் காணப்பட்டன. புதிதான நூற்றுக்கணக்கான கசைகள் ராணுவ முகாம்களில் காணப்பட்டன. 30-வது படையின் கமாண்டரான ஜெனரல் ஹோரோக்ஸின் ஆதாரத்தின் பேரில் அநேக கசைகள் சேனையின் பண்டகசாலைகளில் ஜெர்மன் துருப்புகளுக்கு விற்கப்பட்டனவென்று நான் அறிகிறேன். கசைகளைக் கண்டுபிடித்தபின் ஜெர்மானியர்களிடம் நேசதேசத் துருப்புகளுக்கு அதிக வெறுப்பு உண்டாகியிருக்கிறது.

நிச்சயமாக ஜெர்மானியர்கள் நல்ல நடத்தை உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஜெர்மன் ஸோல்ஜர்களின் கூட்டத்தின் வழியாக ஒருவர் தனியாகச் செல்லலாம். அவர்கள் உன்னைப் பார்த்தால் ஸலாம் வைப்பார்கள். வழியைக்கேட்டால் அவர்கள் மரியாதையுடன் காண்பிப் பார்கள். ஒரு சில நாட்களுக்கு முன்தான் இவர்கள் நேசதேசத்தார்களைக் கொலை செய்து வந்தார்களென்று நினைப்பது கடினமாக இருக்கிறது. அவர்கள் கொலையாளிகளைப் போலிருக்க வில்லை. உலகத்தை இரண்டு தடவை ரெத்தவெள்ளத்தில் மூழ்கடித்த அவர்களின் ஸ்வபாவம் இப்பொழுது நேசதேசக் கட்டுப்பாட்டின் கீழ் மறைந்து கிடக்கிறது.

ஜெர்மானியர் பிரியப்படுவதெல்லாம் அதிகாரம்தான். இப்பொழுது அதிகாரம் நேச தேசத்தாரிடம் இருந்துவருகிறது. ஜெர்மானியர் அதிகாரத்திலுள்ள எவருக்கும் கீழ்படிந்து நடப்பார்கள். ராணுவ நிர்வாக ஆபீஸர்கள் இதேமாதிரி என்னிடம் அநேகம் தடவை சொல்லியிருக்கிறார்கள். ஜெர்மனியிலுள்ள ஒவ்வொரு நேசதேச ஸோல்ஜரும் இவ்வளவு கண்யமுள்ளவர்கள்போல் காணப்படும் ஜெர்மானியர்கள் பெல்ஸன் போன்ற அக்கிரமங்களை எவ்விதம் செய்தார்கள் என்று கேட்டதற்கும் இதுதான் பதில்.

எவர் அதிகாரம் வகித்தாலும் அதற்கு அவர்கள் கீழ்படிந்து நடப்பார்கள். மனச்சாக்ஷியை யும் மற்ற எதையும்விட ஜெர்மானியருக்கு கீழ்படிந்து நடப்பதுதான் முக்கியமான நற்குணம். நேசதேசத்தார்கள் அதிகாரம் செலுத்திவரும் வரையில் ஜெர்மானியர்கள் ஒரு தொந்திரவும் அளிக்கமாட்டார்கள். அவர்கள் திருப்தியுடனிருப்பார்கள். உத்திரவுகளைமாற்றி வேண்டு கோள்களை விடுத்தால் கசையும், பெல்ஸனும், பூகன்வால்டும் உள்ள தீமை ஸ்வபாவம் தோன்றிவிடும். உலகத்தில் மறுபடியும் தொந்திரவு ஏற்படும். இது உண்மையென்றால், இது முதற்கொண்டு ஜெர்மானியர்களுக்குத் தகுந்த அதிகாரிகள் உத்திரவுகளை பிறப்பிவிக்க வேண்டும்.

---

# தூரக்கிழக்குப் போர் எப்பொழுது, எவ்விதம், எங்கு ஆரம்பம்?

## நேசதேச யுத்த தந்திரத்திற்கு வழிகாட்டிகள்.

பஸிபிக் போரின் காலவரையை பாதிக்கக்கூடிய மிகவும் அத்யாவசியமான அம்சங்கள் பின்வருமாறு. (1) ஆக்கிரமிப்பு நாடுகளில் ஜப்பான் எதிர்த்து நிற்கக்கூடிய சக்தியின் அளவு. (2) துருப்புகளையும், முஸ்தீப்புகளையும், புதிய போர் அரங்கத்திற்குக் கொண்டுபோவதற்கு நேசதேசத்தார்களுக்குத் தேவைப்படும் கால அளவு. (3) நேசதேசத்தாரின் சலனத்துக்கு பருவகால சிரமங்கள் குந்தகம் விளைவிக்கக்கூடிய அளவு. மற்றும் நாம் அறியாத சில அம்சங் களும் இருக்கின்றன. ஆகிலும் இவைகள்தான் முக்கியமான அம்சங்களென்று அமெரிக்க அறிக்கை வெளியிடுகிறது.

எல்லா விஷயங்களையும் கவனித்தால் அடுத்துவரும் ஆறு மாதங்களில் நேசதேசத்தார் கள் எதிரியைத் தாக்கக் குவிக்கக்கூடிய படைகளின் பலத்தைப் பொருத்து போரின் நீடிப்பு காலம் நிர்ணயிக்கப்படும்.

அமெரிக்கப் படைகளும், ஐரோப்பியப் படைகளும் பஸிபிக்குக்குச் செல்லப் புறப்பட்டு விட்டன. அந்தப்படைகளுக்கு ஜப்பானியப் போர்ப் படைகளைப்பற்றியும் அவனுடன் போர் நடத்தும் முறைகளிலும் இரண்டு மாதங்கள் வரையில் பயிற்சியளிக்கப்படும். இப்பொழுது பருவ காலம் முன்போல அவ்வளவு இடையூறாக இருக்காதென்று கருதப்படுகிறது. சமுத் திரத்தில் கொந்தளிப்பும், குறைவான திருஷ்டியும், சக்தியும் ஏற்பட்டாலும் இந்த அபாயங் களை நவீன அனுபவத்தினாலும், முஸ்தீப்புகளாலும் ஒரு சிறிது தவிர்த்து விடலாம்.

தூரக்கிழக்கில் அடுத்த படியாக நடவடிக்கைகள் எவ்வகைப் பட்டவையென்றும் அவை எவ்விதம் நிறைவேற்றப்படுமென்பதும்தான் தற்போதிய முக்கியமான பிரச்னைகள். நேச தேசத்தாரின் அலுவல்களைப் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

பர்மாவைத் திருப்பிப் பிடிப்பது, வங்காள விரிகுடாவிலிருந்தும், ஸியாம், பிரெஞ்சு இந்தோ-சைனா, மலேயா, கிழக்கு இந்தீஸ் தீவுகளிலிருந்தும் ஜப்பானியர்களை துறத்தியடிப் பது. நியூகினியாவில் எஞ்சியுள்ள ஆக்கிரமிப்புப் பிரதேசத்திலிருந்தும், பிலிப்பைன்ஸிலிருந் தும், பஸிபிக்கிலுள்ள மற்ற தீவுக்கூட்டங்களிலிருந்தும் எதிரியைச் சுத்திசெய்வது, ஆசியா கண்டத்திலிருந்து ஜப்பானியர்களை அப்புறப்படுத்துவது.

ரெங்கூனை சமீப காலத்தில் பிடித்ததென்பது டோக்கியோவுக்குச் செல்லும் ரஸ்தாவில் ஒரு முக்கியமான நடவடிக்கையாகும். அடுத்த படியாக பர்மாப் போரில் சால்வீன் நதிக்குக் கிழக்கிலுள்ள பிரதேசம் சுத்திசெய்யப்படவேண்டும். மோல்மீன் ஆக்கிரமிக்கப்பட வேண்டும். அதன்பின் மலேயாவுக்குப் போகும் குறுகலான பூ பாகம் சுத்திசெய்யப்படவேண்டும். வங்காள விரிகுடாவில் அந்தமான், நீகோபார் தீவுகளிலிருந்து ஜப்பானியர்களை அப்புறப் படுத்தவேண்டும்.

அதன்பின் அநேக நடவடிக்கைகள் சாத்யமானவை. தென் கிழக்கு ஆசியா சம்பந்தப் பட்ட மட்டில் மலேயாவும் சிங்கப்பூரும் திரும்பிப் பிடிக்கவேண்டும். தென் கிழக்கு ஆசியா கமாண்டைச் சேர்ந்த படைகள் தரைமூலமாகவும், ஆகாய மூலமாகவும் சியாமுக்கும், பாங்காக்குக்கும் செல்லக்கூடும். ஆனால் தரைமார்க்கம் அவ்வளவு சுலபமானதல்ல.

இந்தப் போர் பிராந்தியத்தில் மற்றொரு பகுதியில் ஒன்றுபட்ட கடல், ஆகாய நடவடிக்கை மூலம் படைகள் இறக்கப்படவேண்டும். சியாமையும் சுமாத்ராவையும் ஒரே சமயத்திலும் தாக்குவதும் சாத்யமானது. அவ்விதம் நடைபெறுவிடில் நேசதேசப்படைகள் பிரைவடிவமாக மலாக்கா ஜலசந்தியின் வடக்குக்கோடி, சுமத்ரா, ஜாவா பிராந்தியங்களில் தாக்குதல் செய்யக்கூடும். சபாங்கையும் அதற்குத் தெற்கிலுள்ள சுமத்ராவையும் வெடிவிமானங்கள் பலமான முறையில் தாக்கி வருவதுதான் இந்த யுத்த தந்திரத்திற்கு சூசகங்கள்.

---

# ஜப்பானைத்தாக்கும் முறை.

## பஸிபிக்கில் இருவகை அபாயம்.

### (லெப்டினெண்ட் ஜெனரல் ஸர் டக்ளஸ் ப்ரௌன்ரிக்).

ஜெர்மனியைத் தாக்கும்போர் பிரிடனுடையவும், அமெரிக்காவினுடையவும், முக்கியமான கவனத்தையும், ருஷ்யாவின் பூரா கவனத்தையும், ஆகர்ஷித்து வந்தபொழுது கடற்தளபதி நிமிட்ஸும், ஜெனரல் மாக் ஆர்தரும் அமெரிக்கப்படைகளுக்கும், ஜப்பானுக்கும் மத்தியிலுள்ள கடல், தரைமார்க்கமான தூரத்தை பலமாகக் குறைத்து வந்தார்கள்.

தென்மேற்கு பஸிபிக் தீவுகளிலுள்ள ஜப்பானியப் படைகளை ஜெனரல் மாக் ஆர்தர் தாண்டிச் சென்றபொழுது ஆஸ்திரேலியப் படைகள் துடைக்கும் வேலையில் ஏவப்பட்டன. இப்பொழுது ஜப்பானைச் சுற்றியுள்ள சமுத்திரங்களில் அமெரிக்கக் கடற்படை தயார்செய்து வரும்பொழுது பிரிடிஷ் கடற்படையின் ஒரு பெரும்பாகம் அதனுடன் ஒத்துழைத்து வருகிறது.

மேற்குப் பக்கத்திய போரைப்போல பஸிபிக் போரும் நேசதேச முயற்சிதான். ஆகிலும் தென்கிழக்கு ஆசியா கமாண்டில் பிரிடிஷ் சாம்ராஜ்யப்படைகள் அதிகமாகவும் பஸிபிக்கில் அமெரிக்கப்படை அதிகமாகவுமிருக்கின்றன.

பஸிபிக்கில் நேசதேசப் படைகளின் நிலைமையைப் பின்வருமாறு சொல்லலாம். மாக் ஆர்தர் பிலிப்பைன்ஸ் கூட்டத்திலுள்ள தீவுகள் எல்லாவற்றையும் அநேகமாகத் திருப்பிப் பிடித்து விட்டான். ஜப்பானியர்கள் லூஸானின் வடக்குத் தீவான வடக்கு மணிலாவில் எதிர்த்துப் போராடுகிறார்கள். மிண்டானோத் தீவின் மத்தியிலுள்ள மலைப்பிரதேசத்திற்கு ஜப்பானிய அகதிகள் துரத்தியடிக்கப்படுகிறார்கள். ஆகிலும் பிலிப்பைன்ஸில் அமெரிக்க ஆதிக்கம் ஏற்பட்டு விட்டதால் அமெரிக்கக் கடற்படைக்கும் விமானப்படைக்கும் அது முக்கியமான தளமாக இருக்கக்கூடும். இந்த தளங்களிலிருந்து மலேயா, சியாம், தெற்கு நாடுகளிலுள்ள ஜப்பானியத் துருப்புகளுக்குச் செல்லும் சர்பரா கடல் மார்க்கங்களை அமெரிக்கப் படைகள் தாக்கக்கூடும். பார்மோஸாவை விமானமூலம் தாக்குவதிலிருந்து பார்மோஸாவுக்கும் சீன கடற்கரைக்கும் மத்தியிலுள்ள கடல் மார்க்கம் முற்றுகை செய்யப்படுமென்று தோன்றுகிறது.

வடக்குப் பக்கத்திய போரைப்பற்றித்தான் நான் சொல்ல விரும்புகிறேன். அமெரிக்கர்கள் பிலிப்பைன்ஸைவிட முக்கியமான தளத்தையும் அமைத்து விட்டார்கள். அவர்கள் முன்னணி தளமான ஆகினவாவை பூராவாகப் பிடித்து விட்டார்கள். இதன் மூலம் தரைப் படைகள் முன்னேறும் தளமும் கிடைத்து விட்டது.

பிலிப்பைன்ஸ் இருகையுள்ள உறைவாள் என்றும் அமெரிக்கக் கடற்படையும் விமானப் படையும் அதைப் பிடித்துக்கொண்டிருக்கிறதென்றும் கருதினால், ஆகினவா வென்பது வாளின் முனையாகும். அது அங்கிருந்து வடக்கில் 350 மைல்களிலுள்ள ஜப்பானைத் தாக்கக்கூடிய சமீப ஸ்தலம். ஸ்காபாவுக்கு ஒப்பிடக்கூடிய ஒரு துறைமுகம் ஆகினவாவில் இருக்கிறது. இருதரப்பாருக்கும் ஆகினவா மிகவும் முக்கியத்வமுள்ளதென்று அறிந்தால் அதற்காக ஏழு வாரங்களாக ஜப்பான் கடுமையாகப்போரை நடத்தியதென்பது சகஜம் என்று தோன்றும்.

அதற்குக் கிழக்கில் 1000 மைல்களுக்கு அப்பாலில் மாரியனாஸ் தீவுகளும் ஐவோஜிமாத் தீவும் ஜப்பானிய ராணுவ அதிகாரிக்கு மற்றொரு பிரச்னையை உண்டு பண்ணுகின்றன. அமெரிக்க சூபர் பறக்கும் கோட்டை விமானங்கள் மாரியனாஸில் இருக்கின்றன. ஐவோஜிமா ஜப்பானின் முக்கிய தீவான ஹான்ஷுவிலிருந்து 650 மைல்களிலிருக்கிறது. படைகளை இறக்க அது ஒரு முன்னணி தளம்.

பிலிப்பைன்ஸிலிருந்தும் மாரியனாஸிலிருந்தும் ஏற்படும் இருவகைப்பட்ட அபாயங்களும் ஆகினவா, ஐவோஜிமா என்ற முன்னணி ஸ்தலங்களும் ஜப்பானைத் தாக்கும் முறையை விளக்கிக்காட்டுகின்றன. ஒன்றுபட்ட பிரிடிஷ் அமெரிக்கக் கடற்படைகள் ஜப்பானைச்சுற்றி யுள்ள சமுத்திரங்களில் சஞ்சாரம் செய்து ஜப்பானியக் கடற்படையில் எஞ்சியிருக்கும் பாகத்தை வலுச்சண்டைக்கு அழைக்கின்றன.

இந்தக் கடற்படை, விமானப்படை அபாயம் ஜப்பானை சரணகதி செய்யும்படி கட்டாயப் படுத்த போதுமானதா, அல்லது பர்மாவிலுள்ள பிரிடிஷ் சாம்ராஜ்யப் படைகள் வடக்கில் வெகுதூரம் முன்னேறி சீனக் கடற்கரையிலிருந்து ஜப்பானைப் படையெடுக்கும் வரையில் காத்துக்கொண்டிருக்கவேண்டுமா என்பதுதான் முக்கியமான பிரச்னை.

வெடிகுண்டு வீச்சின் மூலம் மட்டும் எந்த யுத்தத்திலும் வெற்றிபெற முடியாதென்று அடிக்கடி சொல்லுவதுண்டு. அந்த முறையினால் மட்டும் எந்த யுத்தமும் வெற்றிகரமாக முடிவடையவில்லையென்பதும் உண்மைதான். ஆகிலும் ஜப்பானில் நவீன யுத்தத்திற்குரிய யுத்த முஸ்தீப்புகளை உற்பத்தி செய்யப் போதுமான தாவரப்பொருள்கள் கிடையாது. ஜெர் மனியைப் போலில்லாமல் ஜப்பானுக்குத் தேவையான நிலக்கரியின் பெரும்பாகமும் இரும்பு உலோகமும் சைனுவிலிருந்தும் கொரியாவிலிருந்து சூஷிமா ஜலசந்தி வழி யாகவும் மஞ்சூரியாவிலிருந்தும் இறக்குமதி செய்யப்படவேண்டும். ஜப்பானின் பெரிய நகரங்களைச் சுற்றிலும் உள்ளதும் சுலபமான லக்ஷியங்களுமான தொழிற்சாலைப் பிரதேசங்கள் வெடிகுண்டுகளின் தாக்குதலின் மூலம் ஜெர்மனியில் ஏற்பட்டதைவிட ஜப்பானுக்கு அதிக நாசத்தை விளைவிக்கின்றன. விமான நடவடிக்கை மூலம் தாதுப்பொருள்களின் குவியல்கள் அழிக்கப்படுகின்றன. அவைகளை ஈடுசெய்ய முடியாது.

வெடிகுண்டு வீச்சின் மூலம் ஜப்பானின் போர்புரியும் சக்தி அழிக்கப்படும். அதற்கு உதவியாக ஒன்று கடல் விமானப்படை ஜப்பானியக் கடற்கரையை முற்றுகை செய்யும், இதன் மூலம் யுத்தம் சீக்கிரமாக முடிவடையக்கூடும். இல்லாவிடில் நீண்டகாலப்போர் நடைபெற வேண்டும். வடக்கு ஆபிரிகாவுக்கு வெகுதூரம் சென்றுவது அல்லது டி தினத்தன்று நார்மண்டி கடற்கரைக்கு சமீபதூரம் சென்றுவது படையெடுப்பு ஏற்பட்டதுபோல் ஜப்பான் படையெடுக்கப்படவேண்டும். அத்துடன் போர்முடியும்.

---

# ஜப்பானை கடற்படை மூலம் பலமாகத் தாக்குவது.

## பஸிபிக்குக்கு கடற்படைகள்.

### பிரியான் டன்ஸ்டால்.

சாகாஷிமாஸ் தீவின் பேரில் விமானமூலம் கப்பல்கள் மூலம் இடைவிடாது ஸர் H. B. ராலிங்க்ஸிடமுள்ள பிரிடிஷ் பஸிபிக் கடற்படை குண்டுகளை வீசிவருவது அதற்குப் பக்கத்தி லுள்ள ஆகினவாத் தீவுக்கூட்டத்தின் முக்கியமான தீவில் போர்புரிந்துவரும் ஜப்பானியர் களுக்கு மிகவும் கெடுதலாக இருந்துவருகிறது. சாகாஷிமாஸ் தீவை கடற்படை தாக்கு வதற்கு இரண்டு லக்ஷியங்கள் உண்டு. ஒன்று, ஆகினவாப்போரில் இந்தத் தீவிலுள்ளவர்கள் சேர்ந்துகொள்ளாமல் தடுத்துவிடுவது. இரண்டாவதாக, ஜப்பானுக்கும் பார்மோஸாவுக்கும் இடையிலுள்ள பிரதேசம் பூராவிலும் நேசதேசப்படைகளின் பலத்தை அதிகரிப்பது

இந்த ஒன்றுபட்ட வலிமை மிகவும் அதிகமாயிருப்பதால் ஜப்பானியர்களிடம் எஞ்சியுள்ள கடற்படை ஆகிஞவாவிலிருந்து அமெரிக்கப்படைகளைத் துரத்தியடிக்க முடியவில்லை.

சாகாஷிமாஸ் நடவடிக்கை முக்கியத்துவமுள்ளதென்பது பிரிடிஷ் கடற்படையை ஜப்பானிய தற்கொலை விமானங்கள் அநேகம்தடவை தாக்கியிருப்பதிலிருந்தே தெரியவரும். சமீப காலத்தில் நடைபெற்ற தாக்குதலில் ஏழு ஜப்பானிய விமானங்கள் கடற்படையின் பலமான குண்டு வீச்சுகளையும் லக்ஷியம் செய்யாமல் சென்று பிரிடிஷ் கப்பல்களில் மோதியோ அல்லது கப்பல்களுக்கு சமீபத்தில் விழுந்தோ நாசமாகின. எந்நிலைமையிலும் இரண்டுமணி நேரத்துக்கு மேற்படாமல வேலை செய்ய முடியாதபடி நஷ்டம் ஏற்பட்டதே ஒழிய அதிகச் சேதம் உண்டாகவில்லை

ஆஸ்திரேலியாவின் முக்கியமான தளங்களிலிருந்தும் பிலிப்பைன்ஸிலுள்ள அமெரிக்க முன்னணி தளங்களிலிருந்தும் மரியனாஸ் தீவுகளிலிருந்தும் வெகுதூரத்தில் மிகவும் சக்தி வாய்ந்த கடற்படை இடைவிடாது வேலைசெய்து வருகிறதிலிருந்து டெபோ, பழுதுபார்க்கும் கப்பல்கள், சாமான் கப்பல்கள், எண்ணெய்க் கப்பல்சள், வெடிமருந்துக் கப்பல்கள் உள்ள ஒரு கப்பல் கூட்டம் இப்பொழுது நடமாடிவருகிறதென்று தெரியவருகிறது. மற்ருெரு யுத்த அரங்கத்தில் பிரிடனின் கிழக்கு இந்தீஸ் கடற்படை யோரில் மற்ருெரு வெற்றியைப் பெற்றது. சமீபகாலத்தில் இரு இரவில் காப்டன் M. L. பவர் R. N. இடமிருந்த ஸாக் மாரக்ஸ், வீனஸ், விராகோ, விஜிலண்ட், வெருலாம் என்ற நாசகாரிகள்கொண்ட கடற்படை மலாக்கா ஜலசந்தியிலுள்ள பினங்குக்கு 50 மைல் தூரத்தில் பத்து, எட்டு அங்குல பீரங்கிகள் அமைக்கப்பட்டிருந்த நாடி வகுப்பைச்சேர்ந்த 10,000 டன்கள் எடையுள்ள ஜப்பானிய சஞ்சாரியை மூழ்கடித்தன. இந்த நாசகாரிபேரில் பிரிடிஷ் விமானந்தாங்கிக் கப்பலான ஷாவில் சென்ற விமானங்கள் இதற்குமுன் வெடிகுண்டுகளை வீசியிருக்கின்றன.

ஜெர்மன் யுத்தம் முடிந்துவிட்டதிஞல் ஏராளமான நாசகாரிகளும் மற்ற சிறிய யுத்தக் கப்பல்களும் ஜப்பானைத்தாக்க அனுப்பப்படும். போர்க் கப்பல்களும், நீர்மூழ்கிகளை அழிக்கும் கார்வெட்டிகளும், சுரங்கவாரிக் கப்பல்களும், கவசம்பூண்ட டிராலர்களும் லேசான கடற்கரைப் படகுகளும் செல்லக்கூடும். இவ்விதமாக துணைக்காவலுக்கும், நீர்மூழ்கியைத் தாக்குவதற்கும், சுரங்கவெடிகளை அகற்றுவதற்கும் தெற்கு சீனக்கடலிலும் கிழக்கு இந்தீஸ் தீவுகளுக்கிடையிலும் ஜப்பான் கடற்கரையோரமாகக் கொண்டுபோகும் சாமான் கப்பல்களையும் தாக்கவும் கப்பல் வசதிகள் கிடைத்துவிட்டன.

இதே சமயத்தில் ஜப்பானுக்கும் ஜெர்மன் கடற்படைக்கும் தொடர்பு இருக்கிறதென்பது வெளியாகிவிட்டது. தகரம், மாலிபட்டனம், உல்ப்ரம், ரப்பர், குவினைன் முதலிய சாமான் களை ஏற்றிச்சென்ற ஜெர்மன் யூ-படகு 532 லிவர்ப்பூல் கப்பல் பழுதுபார்க்கும் தளத்திற்கு வந்தது. இந்த சாமான்கள் ஜப்பான் வசமுள்ள நாடுகளில் வாங்கப்பட்டு, பிரிடிஷ் முற்றுகையைத்தாண்டிச் செல்லக்கூடிய ஒரே ஒரு உபாயமான யூ-படகு மூலம் ஜெர்மனிக்குக் கொண்டுபோகப்பட்டது. நியூபௌண்ட்லாந்துக்கருகில் கனடிய யுத்தக் கப்பல்கள் வெகு நேரம் துரத்தியடித்து 1,600 டன்கள் எடையுள்ள மற்ருெரு ஜெர்மன் யூ-படகைப் பிடித்தன. அதில் மூன்று ஜெர்மன் விமானப்படை ஜெனரல்களும் இரண்டு ஜப்பானிய ஆபீஸர்களும் முக்கியமான ஆகாய மார்க்கப் படங்களும் முஸ்தீப்புகளும் இருந்தன. இரண்டு ஜப்பானியர் களும் தற்கொலை செய்துகொண்டு விட்டார்கள்.

ஐரோப்பாவில் வடக்குக் கடலிலும், பால்டிக்கிலும் உள்ள துறைமுகங்களிலும் ஜெர்மன் வசமிருந்த டேனிஷ் துறைமுகங்களிலும் இருந்த சிறிய ஜெர்மன் யுத்தக் கப்பல்களும் நேசதேச வசமாகிவிட்டன. அவைகளில் இ-படகுகளும் R. படகுகளும், M. ரக சுரங்க வாரிக் கப்பல்களும், சுரங்கவெடி பிராந்தியத்தை ஊடுருவிச் செல்லக்கூடியவைகள் (ஸ்பெர் பிரக்கர்), துணைக்காவல் கப்பல்கள், டிராலர்கள், படைகளை இறக்கும் படகுகள் முதலியவை கள் இருந்தன. அவைகள் ஜப்பானைத்தாக்க உபயோகிக்கப்படும் என்று நாம் சொல்லா விட்டாலும் அவைகள் பிரிடிஷ் கடற்படைக்கு ஒத்தாசை செய்வதிஞல் பிரிடிஷ் கப்பல்களை கிழக்குக்கு அனுப்ப வசதி ஏற்படும். அவ்விதம் செய்யாவிடில் சுரங்கவெடிகளை அகற்று வதற்கும் ஜெர்மன் துறைமுகங்களைத் திறப்பதற்கும் அங்கு நேசதேச கடற்படையின் கண்காணிப்புக்கும் அவசியமான பல்வேறு வேலைகளைச் செய்வதற்கும் பிரிடிஷ் கடற்படை ஐரோப்பாவிலேயே தங்கியிருக்கவேண்டி நேரிடும்.

ஐரோப்பியப் போரின் இறுதி கட்டத்தில் இரண்டு பேர் ஓட்டும் சிறிய நீர்மூழ்கி களையும் ஒருவர் செல்லும் இரண்டு ரகமுள்ள சிறிய நீர்மூழ்கிகளையும் ஜெர்மனி

உபயோகித்து வந்ததென்று கடற்படை இலாகாவும் விமானப்படை இலாகாவும் வெளியிட்டிருக்கிறது. அவைகள் பிரிடிஷ் கிழக்குக் கடற்கரையிலிருந்து ஷெல்ட் நதி முகத்துவாரத்திற்குச் சென்ற நேசதேச சாமான் கப்பல்களை மூழ்கடிக்கமுயன்றன. அவைகளின்பிரயத்தனம் வீணாகிவிட்டது. ஏனெனில் அவைகளுக்கு இ-படகுகளைத்தவிர ஜெர்மன் விமானப் படை யாவது அல்லது ஜெர்மன் கடற்படையாவது ஒத்தாசை செய்யவில்லை. பிரிடிஷ் கடற்படையும் விமானப்படையும் சேர்ந்து 170 யூ-படகுகளைத் தாக்கியிருக்கின்றன. 81 யூ படகுகள் மூழ்கடிக்கப்பட்டன அல்லது அநேகமாக மூழ்கியிருக்கலாம் அல்லது பிடிபட்டன.

1945-ம்வருஷ மேமாதம் 8-ம் தேதிவரையில் பிரிடனுக்கு நஷ்டமான 163 கப்பல்களின் பெயரை பிரிடிஷ் கடற்படை இலாகா வெளியிட்டிருக்கிறது. எதிரிக்கு இந்தத் தகவல்கள் தெரியவராதென்று நம்பப்படுகிறது. அவைகளில் பிரிடனுக்கு அமெரிக்கத் துருப்புகளை ஏற்றிச்சென்ற க்வின்மேரி என்ற பெரிய சாமான் கப்பலால் துண்டாடப்பட்ட குராஷியோ என்ற சஞ்சாரியும் மற்றும் 10 நாசகாரிகளும், எட்டு நீர்மூழ்கிகளும் சேர்ந்தவை. நாசமடைந்துவிட்டதாகச் சொல்லப்படும் இந்த உபரிக்கப்பல்கள் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலுமுள்ள கடற்படைகளைவிட அதிக பலம் பொருந்தியவையென்று சொல்லலாம்.

---

# பஸிபிக்கில் விமானந்தாங்கிகளில் செல்லும் விமானப்படை.

## நேசதேச வெற்றிக்குக் காரணம்.

### E. கோல்ஸ்டன் ஷெபர்ட்.

ஆறு மாதங்களுக்கு மேலாக ஜப்பானிய விமானிகளின் தற்கொலை தந்திரத்தைப்பற்றி தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. சமீபகாலத்தில் பிரிடிஷ் கப்பல்களில் எதிரியின் விமானங்கள் வந்திறங்கியதாக செய்தி கிடைத்திருக்கிறது. இவைகளை கவனித்தால் ஜப்பானியக் கடற்படை, ராணுவப்படைக்கு ஒத்தாசை செய்யும் விமானப்படைக்கு அதிக சங்கடம் ஏற்பட்டிருக்கிறதென்று ருஜுவாகுகிறது. விமானப்படை ஆதிக்கத்தை இழந்த ஒரு வல்லரசுதான் பிராசீனமான தந்திரத்தைக் கை விட்டுவிடும்.

விமானந் தாங்கிகளை இழக்க ஆரம்பித்த பொழுதே, அதாவது மூன்று வருஷங்களுக்கு முன்பே; விமானப்படை ஆதிக்கத்தைப் பெறமுடியுமென்ற நம்பிக்கையை ஜப்பான் இழந்துவிட்டது. ஜப்பான் வசம் ஏராளமானத் தீவு தளங்கள் இருந்ததினால் அது அதன் நஷ்டங்களின் மிகுதியை அது பொருட்படுத்தவில்லை. தரையிலிருந்து புறப்படும் விமானங்கள் கப்பல்களில் இருந்து புறப்படும் விமானங்களைவிட உயர்வானவையென்று அடிக்கடி சொல்லப்படும் அறிக்கையை அப்படியே ஜப்பான் நம்பிவிட்டது. இந்த அறிக்கை அநேக வருஷங்களாக உண்மையாக இருந்தது. பொதுவாக அதை இன்றும் ருஜு செய்யலாம்.

ஆனால் 20 வருஷங்களாக இருந்த மற்றொரு உண்மையான, வேகத்தைவிட யுத்த தந்திரத்திற்கு வெகுதூரம் செல்லுவதுதான் முக்கியமென்பதை ஜப்பான் மதித்துப்பார்க்கவில்லை. தீவுகளைத் தாக்கும் போரில் விமானந் தாங்கிகள்மூலம் விமானங்களுக்கு அதிக தூரம் செல்லும் சக்தி உண்டாகிவிடுகிறது. விமானந் தாங்கிகள் தரையிலிருந்து புறப்படும் ஜப்பானியச் சண்டை விமானங்களின் வட்டாரம் தாண்டி நின்றபொழுது அவைகள் பத்திரமாக இருந்தன. அதாவது பத்தில் ஒன்பது அபாயங்களிலிருந்து தப்பித்து வந்தன. அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல்களைத் தாக்கச் சென்ற வெடி விமானங்களுக்கு ஜப்பான் சண்டை விமானங்களை ஒத்தாசைக்கு அனுப்பமுடியாமல் போனது முதல் ஜப்பானின் விமான சக்திக்கு அந்தியகாலம் வந்துவிட்டது.

அதாவது அமெரிக்காவின் மிதக்கும் விமான தளங்களைவிட ஜப்பானின் விமான தளங்கள் நிச்சயமாக நாசம் செய்யப்படக்கூடியவை என்று ஏற்பட்டது. இவ்விதமான அறிக்கை முரண்பட்டதாகத் தோன்றலாம். ஆகிலும் அதுதான் உண்மை. இதற்குத் தெளிவான காரணங்கள் உண்டு, விமானந் தாங்கி என்பது சிறிய அசைந்து செல்லும், லக்ஷியம். அதில் தற்காப்புக்காக சண்டை விமானங்களும் தாக்குவதற்காக வெடி விமானங்களும் கொண்டுபோகப்படுகின்றன. எதிரியின் சண்டை விமான வட்டாரம் தாண்டி விமானந் தாங்கி தாக்கப்பட்டால் தாக்கும் வெடி விமானங்களை விமானந் தாங்கியிலுள்ள சண்டை விமானங்கள் அவைகளின் வட்டாரத்திற்குள் வந்தவுடனேயே தாக்க ஆரம்பித்துவிடும். விமானந் தாங்கியை நெருங்கிவரும்பொழுதே வெடி விமானங்களுக்கு அதிக நஷ்டம்

ஏற்படும். எஞ்சியவைகளும் வெடிகுண்டுகளை வீச யத்தனம் செய்யும்பொழுது தாக்கப்படும். அவைகளின் லக்ஷியமும் எண்ணம் நிறைவேறவொட்டாமல் அங்குமிங்கும் நிகுதியில்லாமல் அசைந்துகொண்டிருக்கும். ஆகையால் கப்பலை நேராக அடிப்பதென்பது அபூர்வம் தான்.

ஆகிலும் விமானந்தாங்கியிலிருந்து செல்லும் விமானங்கள் ஒரு தரை விமான தளத்தைத் தாக்க முயன்றால் லக்ஷியம் அசைந்து செல்லுவது என்பதைத் தவிர மற்றெல்லா இடையூறுகளும் காணப்படும். மேலும் விமானந் தாங்கியின் கமாண்டர் முன்னேறித் தாக்குவதற்கும் தற்காப்புக்கும் ஏற்பாடுகள் செய்துகொள்ளாவிட்டால் இந்த சிரமங்கள் தோன்றும். விமானந் தாங்கிகள் இருக்கும் பல திசைகளிலிருந்தும் எதிரியின் தற்காப்பு அமைப்புக்குக் குழப்பம் ஏற்படும் வகையிலும் அடிக்கடியும் கமாண்டர் தரை விமான தளத்தைத் தாக்கலாம். தற்காப்பு விமானப்படையை சண்டைக்கு இழுத்த பின்னும் லக்ஷியம் ஸ்திரமாக இருக்கிறதென்ற நிச்சய புத்தியுடன் அவன் லக்ஷியத்தைத் தாக்க முற்படலாம். அவன் கொண்டுவரக்கூடிய விமானந்தாங்கிகளின் சங்கியையைப் பொருத்து ஒரு தீவிலுள்ள விமானதளம் அநேக தடவை தாக்கப்படலாம். அவன் ஒவ்வொரு விமானந் தாங்கியாக இழந்தாலும் எதிரிக்கு வெற்றிகரமாக தற்காப்பு செய்யும் சந்தர்ப்பம் குறைவாகத் தானிருக்கும். தீவுதளங்களை அமெரிக்கா திரும்பிப்பிடித்ததற்கு முன் அமெரிக்க விமானந் தாங்கிகளில் சென்ற விமானங்கள் ஜப்பானிய விமானந்தாங்கிகளில் சென்ற விமானங்களை அழிக்கவும் தீவுகளிலுள்ள ஜப்பானிய விமான தளங்களை நொருக்கவும் முயற்சிசெய்துவந்தன. சென்ற சில மாதங்களில் விமானந் தாங்கிகளிலிருந்த விமானங்கள் ஜப்பானைச் சேர்ந்த தீவுகளைத் தாக்க அனுப்பப்பட்டன. அவ்விதம் தாக்க விமானந் தாங்கிகள் ஜப்பானிய தரை விமான தளங்களிலுள்ள சண்டை விமானங்களின் வட்டாரம் தாண்டி சுமாராக 300 மைல்களுக்கப்பாலில நின்றுகொண்டிருந்தன. ஆகையால் ஜப்பானிய வெடி விமானங்களுக்கு சண்டை விமானங்களின் துணை கிடைக்கமுடியாமல் போய்விட்டது. அதன் விளைவு யாதெனில் சென்ற அக்டோபர் மாதத்திலிருந்து ஜப்பானிய தற்கொலை தந்திர நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஐரோப்பிய, அட்லாண்டிக் சமுத்திரங்களில் பிரிடிஷ் கடற்படை ஈடுபட்டிருந்ததால் இந்தக் கொள்கையை அமெரிக்க கடற்படை மகத்தான முறையில் பிரதிபாதனம் செய்து வந்தது. இந்த வேலையை அமெரிக்க விமானந்தாங்கிகளில் சென்ற விமானங்கள் திறமையுடன் செய்துவந்தன. தூரக்கிழக்கிலுள்ள பிரிடிஷ் கடற்படைப் படைகள் இந்த வேலையில் கலந்துகொண்டு அந்தக் கொள்கைகளை வெற்றிகரமாக பிரயோஜனப்படுத்திவருகின்றன. 80 விமானங்கள் உள்ள ஒரு பிரிடிஷ் விமானந்தாங்கி இந்தக் கொள்கையை ஐந்து வருஷங்களுக்குமுன் அமுலுக்குக் கொண்டுவந்தது. 1940-ம் வருஷம் நவம்பர் மாதம் 11-ம் தேதி இரவில விமானந்தாங்கிகளில் சென்ற ஸ்வார்ட்பிஷ் விமானங்கள் டாரொண்டா துறைமுகத்திலிருந்த இதாலிய கடற்படையின் பெரும் பாகத்தைத் தாக்கின. விமானந்தாங்கிக்கு யாதொரு பழுதும் ஏற்படவில்லை. அப்பொழுது அது எதிரியின் தரை விமான தளங்களிலிருந்து 200 மைல்களுக்குள் சஞ்சாரம் செய்துவந்தது.

பஸிபிக்கிலுள்ள விமானந்தாங்கிகளின் விமான சக்திதான் முக்கியமாக உபயோகிக்கப்படுகிறது. ஆரம்பகாலத்தில் விமானந்தாங்கிகளிலும், தரை விமான தளங்களிலும் எதிரி பெற்றிருந்த விமான ஆதிக்கத்தை அது அழித்துவந்தது. ஆங்காங்கு கிடைத்த விமானப்படை ஆதிக்கத்தைக்கொண்டு தீவுகளைப் பிடிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. ஆகினவா பிடிபட்டால் நேசதேசத் தரை விமான தளங்கள், ஜப்பானியத் தீவுகளில் தளங்களைக் கைப்பெற்றுமலேயே சமீபதூரத்திலேயே கிடைத்துவிடும். விமானந்தாங்கிகளில் வந்த கனமான வெடிவிமானங்கள் தாக்கும்தூரத்தில் வந்துவிட்டன. அவைகளின் உதவிகொண்டு விமானப்படையைப் பெருக்கி அதைப் பரிபாலிப்பதென்ற ஜப்பானின் சக்தி அழிக்கப்பட்டு வருகிறது. இப்பொழுதுதான் சண்டை விமானங்கள் பறந்துசெல்லும் வட்டாரம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. விமானந்தாங்கிகளின் வெற்றிகரமான லாபங்களை சேனைகளும் கனமான வெடிகுண்டுகளை அபரிமிதமாகப்போடும் பெரிய வெடிவிமானப்படைகளும் பயன்படுத்திக் கொண்டிராவிட்டால் விமானந்தாங்கிகள் எதிரியின் தரை விமான தளங்களுக்கருகில் நிலை பெற்றிருக்கமுடியாது. விமானந்தாங்கிகளை இவ்வளவ பயன்படும்படியாக உபயோகிக்கக்கூடிய மற்றொரு யுத்தம் மூளாது. ஆகிலும் இந்த ரகசிய ஆயுதத்தின் உபயோகத்தைக் கண்டுபிடித்திருக்கும் அமெரிக்கர்களும் பிரிடிஷார்களும் இந்தக் கப்பல்களைக்கொண்டே ஜப்பானின் அந்தியகாலத்திற்கு ஏறபாடு செய்திருக்கிறார்கள்.

# பர்மாவில் புகழ் சம்பாதிப்பது.

## மேற்கு ஆபிரிக்கப் படைகளின் தீரம்.

### (ஹவார்ட் ஜார்டைன்).

பிரிடிஷ், இந்தியத் துருப்புகளுடன் தோளோடு தோள் நின்று போர் புரிந்துவரும் 81-வது மேற்கு ஆபிரிக்க டிவிஷனும் பர்மாப் போரில் புகழ்பெற்று வருகின்றது.

ஆபிரிக்கப் படைகளின் சகிப்புத் தன்மையை ஒருவரும் மதிக்காமலிருக்கமுடியாது. அவைகள் குறைவான ஆகாரத்துடனும், ஓய்வுடனும், தண்ணீருடனும் நடந்துசென்று, சிரமப்பட்டு, போர் புரியும். அவைகள் பர்மாவில் காணப்படும் உஷ்ணத்தையும் அசௌகரியங்களேயும் சமாளித்துவரும்.

பிரிடிஷ் படைகளுடன் சேர்ந்து முதல் முதலாக இப்பொழுதுதான் மேற்குப் படைகள் போர் புரிகின்றன என்பதில்லே. அவைகள் முதல் உலக யுத்தத்திலும், இரண்டாவது உலக யுத்தத்தில், அபிஸீனியாப் போரிலும் ஈடுபட்டிருக்கின்றன.

பெரும்பாலும் நைஜீரியர்கள் கொண்ட இந்த டிவிஷனின் ஒரு பாகம் சிண்டிட் நடவடிக்கையின்பொழுது பிராபல்யமுள்ளதாக இருந்தது. ஜெனரல் வின்கேட் அவர்களே முக்கியமாக அனுப்பும்படி வேண்டினர். மேற்கு ஆபிரிக்காவிலிருந்து புறப்படும் முன்பே அவர்களுக்கு வேலே கட்டளேயிடப்பட்டது.

டிவிஷனின் பாக்கித் துருப்புகள் காலாடான் நதிக்கு அனுப்பப்பட்டன. அங்கு பர்மாவில் முன்னேற ஆரம்பித்தபொழுது ஜப்பானியக் கைதிகளேப் பிடித்த புகழை அவர்கள் பெற்ருர்கள். தென்கிழக்கு ஆசியா கமாண்டைச் சேர்ந்த படைகளால் அவர்களுக்குத்தான் முதன் முதலில் சாமான்கள் விமான மூலம் அனுப்பப்பட்டன. அந்தப் படைதான் ஆக்கியாவுக்கு வெகு சமீபத்திற்கு வந்தது.

ஆனல் மேற்கு ஆபிரிக்க ஸோல்ஜரின் அனுதிசயத்தைப்பற்றித்தான் நான் சொல்ல விரும்புகிறேன். யுத்த ஆரம்பத்தில் அவன் பயிற்சி பெற்றது முதல் இன்றுவரை எனக்கு ஞாபகம் வருகிறது. முக்கியமாக மேற்கு ஆபிரிக்காவின் சிறந்த போர் வீரர்களான ஹாஸாவைப்பற்றிக் கூறுகிறேன். அவர்கள் வடக்கு நைஜீரியாவிலுள்ள பத்து மிலியன் ஜனத்தொகையிலிருந்து பொறுக்கியெடுக்கப்பட்டவர்கள். அவர்கள்தான் பர்மாவில் போர் புரியும் படைகளின் பெரும் பாகமாக இருக்கிருர்கள். ஆகிலும் அவர்களேப்பற்றிச் சொல்லக்கூடிய விவரங்களெல்லாம் கோல்ட் கடற்கரை, ஸைராலியோன், கம்பியாவிலிருந்து வந்த எந்த ஜாதி, மதம், பாஷை, கலேஞானத்தைச் சேர்ந்த பேற்கு ஆபிரிக்காகளுக்கும் பொருந்தும்.

அவர்களுடன் வேலே செய்கிற எவரும் அவர்களேப் பாராட்டி நேசிப்பார்கள். யுத்த ஆரம்பத்தில் அவர்களுக்கு பயிற்சியளிக்க மேற்கு ஆபிரிக்காவுக்கு அநேக ஐரோப்பிய ஆபீஸர்களும், ஸார்ஜண்டுகளும் சென்ருர்கள். அவர்களுக்கு நாடும், அதன் வாசிகளும், சீதோஷ்ண ஸ்திதியும் புதியவைகள். இங்கிலாந்திலுள்ள பயிற்சிபெற்ற படைகளே விட்டுவிட்டு ஒரு விஷயங்களேயும் அறியாத ஜாதியாரைப் பயில்விக்கவேண்டியிருந்தது. அவர்கள் யுத்தத்தின் முக்கிய அரங்கங்களே விட்டுவிட்டு ஒன்றுக்கும் உபயோகப்படாத ஒரு பிரதேசத்தில வசித்து வந்தார்கள். அவர்களுக்கு பீதி அதிகமாக இருந்தது. மனேபாவமும் நிம்மதியாக இல்லே. ஆகிலும் ஆபிரிக்கப் படைகளிடம் அன்பில்லாதவர் ஒருவருமில்லே.

ஆபிரிக்கரின் சொந்த குணத்தின் தன்மையினுல்தான் மனித வர்க்கத்தின் சாதாரணமான தொத்து நோய் போன்ற, விவரிக்க முடியாத வேண்டுகோளே இடைவிடாது கடைப்பிடிக்கவும் பொறுமையுடனிருக்கவும் ஒருவருக்கு சாதகமேற்பட்டது.

முதல் முதலாக ஆபிரிக்கர்களுக்கு விநோதப் பேச்சில் மிகுந்த ஆசை உண்டு. அவர்கள் சதாகாலமும் ஒருவருடைய சொந்தமான இடைச் சொற்களேயும், தோற்றத்தையும், தொடர் சொற்களேயும், பரிகாச உக்தியையும், மிகையான ரூபத்தையும் அல்லது அவரைப்போல் நடிப்பதிலும் குதூகலமடைவார்கள்.

அவர்கள் பரிகாசப் பேச்சையும் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளுவார்கள். ஆகிலும் அவர்களுக்கு அதிலிருந்தும் அதிக உணர்ச்சி ஏற்படும்.

திறமையைப் பரிபாலிப்பதற்கு உபரி ஒத்திகையையும் அல்பமான அபராதங்களையும் விட பரிகாச உக்தி மிகவும் உபயோகமுள்ளது. ஒரு குற்றவாளியுடையவோ அல்லது திறமையுடன் வேலை செய்யாதவருடையவோ செய்கையை ஒப்புக்கொள்ளத்தக்கதில்லை என்று சொன்னால் போதுமானது. அதில் யாதொரு மன கிலேசமும் ஏற்படாது. அவரும் பரிகாசப் பேச்சில் கலந்துகொள்ளுவார்.

அவர்கள் ஐரோப்பியர்களை இரண்டு காரணப் பெயர் மூலம் அழைப்பார்கள். ஒன்று எல்லோரும் உபயோகிக்கக்கூடியது. பெயரை மறந்துவிட்ட ஐரோப்பிய ஆபீஸரை உனக்கு அறிமுகப்படுத்தவேண்டுமானால் அவன் அவனுடைய காரணப் பெயரைச் சொல்லுவான். நீ ஒரு ஸீனியர் ஆபீஸராகவோ, அல்லது பரிகாசத்தை ஆதரிக்கும் மனப்பான்மை இல்லாதவராகவோ இருந்தால் அவன் அவ்விதம் சொல்லமாட்டான். பெரிய கண்கள் உள்ளவரை குதிரைக் கண்கள் உள்ளவரென்றும், வளைந்த தோள் வளைகள் உள்ள வரை சாப்பாட்டு மூட்டையைக் கட்டிச் செல்லுகிறவரென்றும், மற்றவர்களை, வௌவால் காது உள்ளவரென்றும், "இஞ்சியைப்போல் மீசை உள்ளவரென்றும்" கோபிஷ்டரென்றும், அழைப்பார்கள். மற்றொரு பெயரை அவர்கள் தங்களுக்குள் சொல்லிக்கொள்ளுவார்கள். இந்தப் பெயர்கள் ஐரோப்பியர்களிடம் வெளியிடப்படுவதில்லை. ஆனால் அந்தப் பெயர்கள் அநேகமாகச் சரியாகப் பொருத்தமாக இருக்கும்.

பர்மாவில் போர் புரியும் அநேக ஆபிரிக்கர்கள் மேற்குக் கரையிலுள்ள அறுகுறையான பாலைவன பீடபூமிகளிலிருந்து வந்தவர்கள். ஆகிலும் அவர்கள் காட்டுப் போரில் நிபுணர்களாகி விட்டார்கள்.

அவர்கள் பொருமையுடன் கஷ்டங்களை ஏற்றுக்கொள்ளும் தன்மை பாராட்டத் தக்கது. அவர்களின் தீரச் செய்கைகளுக்கும் அதுதான் காரணம். கத்திகளை மற்றும் உபயோகப்படுத்தி அவர்கள் டோக்கியோவுக்குப் போகும் மேற்கு ஆபிரிக்க ரஸ்தா என்று பெயருள்ள 70 மைல்கள் நீளமுள்ள ரஸ்தாவை காட்டு மார்க்கத்தில் அமைத்து விட்டார்கள். அது ஒரு நதிக்குச் சென்றது. எதிரியின் பலமான படைகளால் சூழப்பட்டபொழுதும் போர் புரிந்துகொண்டே பின்வாங்கி 17 நாட்கள் சமாளித்து வந்ததால் சிண்டிட்டுப் படைகள் கெடுதலான நிலைமைக்குட்படாமல் தப்பித்துக்கொண்டன. அந்தப் பொருமைக்கு அடிப்படையாக எல்லாம் இனிது முடியும் என்ற பிரகாசமான நம்பிக்கையும், எதிர்பாராமல் தோன்றும் பரிகாச மனப்பான்மையும் இருக்கின்றன.

ஆபிரிக்க ஸோல்ஜரின் பலத்தை நாம் எப்பொழுதும் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். முக்கியமாக பர்மாவிலுள்ள காமரோனியர்கள் ஒரு சமயத்தில் ஆபிரிக்கப் படைகளுக்கு வந்தனம் செலுத்தும்படியாக நேரிட்டது. சிண்டிட் ஆபிரிக்கப் படைகள் போரிலிருந்து விலகிக்கொள்ளுவதற்காகப் பின்வாங்கிச் சென்றபொழுதும்கூட காயம்பட்ட காமெரோனியர்களை அவர்கள் காப்பாற்றினார்கள். அவர்கள் காயம்பட்டவர்களையும் இரட்டிப்பு முஸ்தீப்புகளையும் எடுத்துச் செல்லுவதில் அதிக சிரமப்பட்டார்கள்.

பலமாகக் காயம்பட்டவர்களுள்ள டோலிகளை தூக்கிச் சென்றவர்கள் முஸ்தீப்புகளையும் ஆயுதங்களையும் தலையில் வைத்துக்கொண்டே சென்றார்கள். அவ்விதம் தலையில் அனாயாசமாகக் கொண்டுபோவது ஆபிரிக்கர்களுக்கு சுலபமானது. "அவர்களுடைய முயற்சிகளை வர்ணிக்க முடியாதென்று" காமெரோனியர்களின் கமாண்டர் சொன்னார்.

எல்லாவற்றையும்விட ஆபிரிக்கர்கள் ஆழ்ந்த ராஜ விசுவாசமுள்ளவர்கள். யுத்தத்தில் மிகுந்த அனுபவம்பெற்ற ஒரு ஆபீஸர் இவர்களின் உதவிகொண்டு போரை நடத்தலாமென்று ஒரு சமயம் சொன்னான்.

அவர்களுக்குத் தன்னைத்தானே பெருமை பாராட்டிக்கொள்ளும் குணம் மிகுதியாக உண்டு. அவர்கள் அணிவகுத்துச் செல்லுவது பார்ப்பதற்கு ரம்யமாக இருக்கும். அவர்கள் சுலபமான நடையுடனும் தாளத்துடனும் செல்லுவார்கள். அவர்கள் லாரிகளை ஓட்டுவார்கள், பிரென் துப்பாக்கிகளை அவர்கள் துணிவுடனும் சுறுசுறுப்புடனும் உபயோகிப்பார்கள். அவர்கள் பீரங்கிகளை பிரயோகம் செய்வார்கள். பர்மாவில் ஒரு நடவடிக்கையில் ஒரு பீரங்கி 20 நிமிஷத்தில் 600 குண்டுகளைப்போட்டு எதிரிக்கு நாசம் விளைவித்தது.

அவர்கள் எந்த வேலையையும் ஊக்கத்துடன் செய்வார்கள். இது அவர்களுக்கு இயற்கை குணம். அதனால்தான் அவர்களை எல்லோரும் நேசிக்கிறார்கள். அபிஸீனியாவில் அவர்கள தெற்கு ஆபிரிக்கர்களுடன் நட்பு ஏற்படுத்திக்கொண்டார்கள். ஒருவருக்கு மற்றொருவருடையு

பாஷை தெரியாவிட்டாலும் அவர்களுக்கு தெற்கு ஆபிரிக்கர்கள் சிகரட்டுகளைக் கொடுத்து அவர்களுடன் சிரித்து விளையாடி வந்தார்கள்.

ஆபிரிக்கர்களுடன் வசித்த எவரும் அணிவகுத்துச் செல்லும்பொழுது அவர்கள் பாடும் கீதங்களை மறந்துவிடமாட்டார்கள். அவர் முறை வைப்பதுபோல் பாடுவார்கள். தலைவரான ஒருவர் பாடுவார். மற்றவர்கள் சற்று மந்தமான குரலில் அதையே மறுபடியும் பாடுவார்கள். ஆரம்பத்தில் அது கோர்வையாக இராது. தலைவர் மறுபடியும் ஒரு அடி பாடுவார். மற்ற வர்கள் உரக்கப் பாடுவார்கள. அடுத்தபடியாக பாட்டின த்வனி அதிகரித்துவிடும். அதைக் கேட்ட மாத்திரத்தில் ஒருவருக்கு அதிக உல்லாசம் ஏற்படும். இவ்விதமான கீதம் அநேக மணிகள் நேரம் நடைபெறும்.

ஆபிரிக்க ஸோல்ஜரின் பரிகாச மனப்பான்மையும், விஸ்வாசமும், நம்பிக்கையும் அடக்க முடியாதது. பிறருக்கும் பரவக்கூடியது. அவர்களைக்கண்டு வசப்படாதவர்கள் ஒருவரும் இருக்கமாட்டார்கள்.

ஜெனரல் ஸ்லிம் 81-வது டிவிஷன் படைகளைப் பாராட்டி ஒரு செய்தி அனுப்பியிருக் கிறார். அது பின்வருமாறு:—

"சந்தோஷகரமாக சகித்து நிற்கும் தன்மையில் உங்களை எவரும் மிஞ்சமுடியாது. நீங்கள் ஜப்பானியர்களை நாசம் செய்த எண்ணிக்கையும், உங்களுடைய ஐதிகமான தீரமும், கஷ்டங்களை அனுபவித்ததினால் உங்களுக்கு ஏற்பட்ட படிப்பினையும் எதிர்காலத்தில் உங்களைக் கண்டு அஞ்சும்படியாக ஜப்பானியர்களைச் செய்துவிடும்."

---

# பருவ காலத்திய ஆகாய விமானங்கள்.

## தென் கிழக்கு ஆசியாவில் புயல்காற்றுகளின் பலத்தை சமாளிப்பது.

### விங் கமாண்டர் L. V. பிரேசர்.

ரெங்கூனிலுள்ள பிரிடிஷ், தரை, கடல், விமானப் படைகள் பருவ காலத்துடன் கடுமையாகப் போட்டி போடுகின்றன. இந்த வருஷத்தில் இந்த மகத்தான துறைமுகத்தின் பூராப் பிரயோஜனத்தையும் அடையவேண்டுமானால் மூன்று வருஷங்களாகப் போரின் மூலம் ஏற்பட்ட நாசத்தை சரிப்படுத்தவேண்டும். பன்னிரண்டு வருஷங்களாக இல்லாத அதிக மான வெப்பமுள்ள சூர்ய வெளிச்சமும் பருவ காலத்துக்கு முன்னதான கனமான மழைக்கும் மத்தியில் எல்லா படைகளைச் சேர்ந்த இஞ்ஜினியர்களும் பருவகால மழை துவங்குமுன் ரெங்கூனைப் பழுது பார்க்க சிரமப்பட்டு வருகிறார்கள்.

முதன் முதலாக மிங்கலாடன் விமான தளத்தைப் பழுது பார்த்து அதை உபயோக முள்ளதாகச் செய்யவேண்டும். பழுதுபட்ட துறைமுகத்திலிருந்த கட்டடத்தூள்களைச் சுத்தம் செய்து சாமான் கப்பல்கள் தங்கி சாமான்களை இறக்குவதற்கு வசதி செய்யப்பட்டி ருக்கிறது.

மேன் கூரை இல்லாத கட்டடங்களிலிருந்து இடிந்த பாகங்கள் அப்புறப்படுத்தப்பட்டு சாமான்களை வைப்பதற்காக டார்பாலினாலும் மற்ற அவசரத்துக்குரிய சாமான்களாலும் மேன் கூரைகள் அமைக்கப்படுகின்றன. அக்டோபர் மாதம் வரையில் தென் கிழக்கு ஆசியா போர் மழையிலும், சகதியிலும், வெள்ளப்பெருக்கிலும் நடைபெறவேண்டும். அடுத்த நான்கு அல்லது ஐந்து மாதங்களில், நிழலில் நதியின் முகத்துவார பிரதேசத்தில் 100 அல்லது அதற்கு அதிகமாக உள்ள சீதோஷ்ணம், 20 டிகிரி குறைந்துவிடும். ஆனால் இதிலிருந்து ஒரு சௌகரியமும் ஏற்படாது. ஏனெனில் சூர்ய வெப்பம் அதிகரித்துவிடும். அரக்கானில் சூர்ய வெப்பம் 93 சத விகிதம் இருந்துவரும். அந்த உஷ்ணம் வலிமையையும் ஊக்கத்தை யும் குறைக்கக்கூடும்.

நீர்வளம் பொருந்திய இந்தப் பிரதேசத்தில் விசித்திரமான காற்றுகள் மணிக்கு 100 மைல்கள் வேகத்துடனும், வீசும். சாதாரணமாகத் தோன்றும் மேகக்கூட்டங்களில் பனிக் கட்டியும், காற்றுச் சுழல்களும் தோன்றும். இந்த நிலமையுடன்தான் தென் கிழக்கு ஆசியாவைச்சேர்ந்த நேசதேச விமானங்கள் அடுத்து வரும் மாதங்களில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

ஜப்பானியர்களின் குழப்பத்தை பூர்த்தி செய்ய அலைகள் தொடர்ச்சியாகத் தாக்கி வரும் என்பதில் சந்தேகமில்லை. 1943-ம் வருஷத்தில் எதிரியின் விமானங்களும் விமானி

களும் பின்னணியிலுள்ள விமான தளங்களுக்கு ஒப்வெடுத்துக்கொள்ளச் சென்ற பொழுதும் நமது விமானங்கள் நடமாடி வந்தன. கெட்ட பருவ காலத்தையும் நேசதேசப் படைகள் பயன்படுத்திக்கொண்டன. அப்பொழுதும் விமான நடவடிக்கை நடைபெற்றது. சென்ற வருஷம் பருவ காலத்திலும் நடவடிக்கை நின்று விடவில்லை. இரண்டு பருவ காலங்களில் கிடைத்த அனுபவத்தை விமானிகள் இப்பொழுதும் பயன்படுத்துவார்கள்.

பர்மாவில் பிரிடிஷ் 14-வது சேனை வேகமாக முன்னேறியதற்கு நேசதேச விமானப் படை ஆதிக்கம்தான் காரணமாக இருந்தது. இப்பொழுது விமானப் படை சேனைக்கு நெறி செலுத்தவேண்டிய நிலைமையிலிருக்கிறது. ஏனெனில் தரைப படைகள் முன்னேறியதினால் தூரக்கிழக்கு விமானிகளுக்கு மழையினால் ஏற்படும் சிரமங்கள் நிவர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. அவைகள் சின் மலைகளைத்தாண்டி விமான தளங்களைச் சம்பாதித்துக் கொடுத்து விட்டன.

10,000 அடி உயரமுள்ள அந்த மலைகளைச் சுற்றி பருவகால மழைக்கு ஆர்ப்பாட்டம் காணப்படுகிறது. ஜப்பானின் புதிய சாம்ராஜ்யத்திற்கு மலைகள் காவலாளர்களாக இருந்தன. அவைகளின் பேரில் காணப்படும் முரட்டு சுபாவமுள்ள காற்றுகள் அதைத் தாண்டிச் செல்லுகிறவர்களுக்கு சாவுப்பொறிகள் போல் இருந்தன. இன்று தூரக்கிழக்கு விமானப் படையைச்சேர்ந்த விமானங்கள் அபாயம் பொருந்திய குன்றுகளைத் தாண்டியுள்ள தளங்களிலிருந்து புறப்படுகின்றன.

தெற்கில் அதிக தூரம் முன்னேறியதினால் சில அசௌகரியங்கள் ஏற்பட்ட போதிலும் இந்த லாபங்கள் அபாரமானவை. ஏனெனில் பருவகாலம் தெற்கிலிருந்து ஆரம்பமாகி வடக்கிலிருந்து பின்வாங்கிச் செல்லுகிறது. ஆகையால் துருப்புகளும், விமானிகளும் இதற்கு முன் சென்ற வருஷங்களைவிட இப்பொழுது அதிக கஷ்டங்களுக்குள்ளாகவேண்டும்.

மேமீ முதல் வாரத்தில் தெற்கு சயாமில் பருவகால மழை ஆரம்பமாகும். மாத மத்தியில் ரங்கூனில் மழை பெய்யும். இரண்டு வாரங்களுக்குப்பின் அது வடக்கு பர்மாவுக்குப் பரவும். அக்டோபர்மீ முதல் வாரத்தில் அது தெற்கு நோக்கிச் செல்லும். அதனபின் ஒரு மாதம் கழித்து தெற்கு சயாமில் மழை நின்றுவிடும்.

பருவகால நிலைமையைப்பற்றி ஊகித்துச் சொல்லமுடியாது. அது திடீரென்று தோன்றுவதால் ஜோஸ்யம் கூறுகிறவர்கள் விமானிகள் செல்லுவதற்கு எது சௌகரியமான மார்க்கம் என்றுதான் ஆலோசனை சொல்லக்கூடும். இந்த சமயத்தில் 125 மைல்கள் விசாலமான சூறைக்காற்றுள்ள பிரதேசத்தைத் தாண்டிச் செல்லுவதுடன் 40,000 அடிகள் உயரம் வரையிலுள்ள வெண்மையான மேகக்கூட்டங்களையும் தாண்டிச் செல்லவேண்டும். வெண்மையான மேகத்திற்குள் கோரமான குழப்பங்கள் இருக்கும். அவைகள் விமானத்தை தூளாக்கிவிடும்.

கருவிகளும் குழப்பமான பருவ காலத்தில் குயுக்தியான நடவடிக்கைகளைக் காண்பிக்கும். விமானம் 1-நிமிஷத்துக்கு 1-மைல் உயரச்செல்லும் பொழுது கருவிகள் 250 மைல் வீதம் பாய்ந்து செல்வதாகக் காண்பிக்கும். பிரிடிஷ் விமானப் படையைச் சேர்ந்த லிபரேடர் விமானத்தின் காப்டன் பர்மாவில் ஒரு இரவில் புயல்காற்றில் அகப்பட்டுக் கொண்டான். 90-நிமிஷங்கள் வரையில் காற்றினால் அவஸ்தைப்பட்டான். அவன் தப்பித்த பொழுது விமானம் 6,000 அடியில் இருந்தது. ஒன்றன்பின் ஒன்றாக விமானத்திலிருந்தவர்கள் பிரக்ஞையை இழந்தார்கள். அவர்கள் சோர்ந்துவிட்டார்கள் என்று காப்டன் நினைத்தான். பிராண வாயுவின் ஒத்தாசையில் அவர் தன்னுடைய வலுவை திரும்பப் பெற்றார். திடீரென்று உயரமளக்கும் கருவி 18,000 அடியைக் குறிப்பிட்டது. புயல்காற்றில் அது குளிர்ச்சி அடைந்துவிட்டது. விமான வேலைக்காரர்கள் பிராணவாயு இல்லாததால் சோர்ந்து விழுந்து கொண்டிருந்தார்கள்.

ஸ்பிட் பயரில் சென்ற விமானி மற்றொரு விருத்தாந்தத்தை வெளியிட்டார். அதிக உயரம் சென்று வேவு பார்த்துவிட்டுத் திரும்பியபொழுது அவன் இருப்பிடத்திலிருந்து கீழே தள்ளப்பட்டான். விமானம் 20,000 அடி உயரத்திலிருந்து விழுந்துகொண்டிருந்தது. பிரக்ஞையை இழந்த விமானி ஆயிரக்கணக்கான அடிகள் கீழே விழுந்தபின் சுய புத்தியை அடைந்தான். அப்பொழுது பாரசூட் கயிற்றை இழுத்துத் தப்பித்துக்கொண்டான்.

தரையில் போர் புரிகிறவர்களுக்கு பருவகால மழை அவ்வளவு கஷ்டங்களை உண்டு பண்ணுகிறது. ஆகிலும் அந்தக் காலத்தில் அதிக அசௌகரியமும் அதிக கஷ்டமும் ஏற்படும்,

மழை தூக்குத் தூக்காகப் பெய்யும். மத்திய பர்மாவின் வரட்சையான பிரதேசத்திலுள்ள மாண்டலேயைவிட ரங்கூனில் மூன்று மடங்கு அதிகமாகப் பெய்யும். அரக்கான் யோமாஸுக்கு மற்றொரு புறத்தில் ஆக்யாபில் ஜூலை மாதத்தில் 50"-க்கு மேல் மழை பெய்யும். இது நியூயார்க் நகரத்தில் ஒரு வருஷத்தில் பெய்யும் மழைக்கு அதிகமானது. அஸ்ஸாம் மலைகளிலுள்ள சிரபுஞ்சியில் வருஷத்திற்கு 428" மழை பெய்கிறது. ஒரு வருஷத்தில் ஒரு சமயம் 905" மழை பெய்தது. ஒரே நாளில் 41" மழை பெய்தது. விமான தளத்துக்கு அருகில் ஒருவர் மூங்கிலால் அமைக்கப்பட்ட குடிசையில் வசிக்க நேரிடும்பொழுது மழையினால் மிகுந்த சங்கடம் ஏற்படும். இந்த சங்கடத்தை தென் கிழக்கு ஆசியாவிலுள்ள விமானப் படையைச்சேர்ந்த தரைப்படைகள் சகித்துக்கொள்ளுகின்றன. அவர்களின் மனோதிடமும் பர்மாவில் நேசதேசத்தாருக்கு ஏற்பட்ட வெற்றிகளின் மூலம் வலுவடைந்திருக்கிறது.

---

# ஜாப்களும், ஜிப்புகளும்.

பர்மாவிலுள்ள ஜப்பானியர்களுக்கு எதிராக வெகுகாலமாகவும், தீரத்துடனும், திறமையுடனும் நடைபெற்ற போரின் முடிவாக ரெங்கூன் விடுவிக்கப்பட்டு, அதிலிருந்த ராணுவ, பொதுஜனக் கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள். அதன் மூலம் பர்மாவில் ஜப்பானின் ஆதரவில் நடைபெறும் ஐந்தாம்படையான ஜிப்புகளைப்பற்றிய தகவல்களும் வெளிவந்துவிட்டன.

பர்மாவில் இந்தியத் துருப்புகளுடையவும் அவர்களின் சகாக்களுடையவும் நடவடிக்கையானது ஜப்பானின் பிரசார முறைகளைச் சிதற அடித்தபின் ஜிப்புகளைப்பற்றி விவரங்கள் நமக்கு ருசிகரமான தகவலாக இருக்குமேயல்லாது வேறு முறையில் பிரயோஜனப்படாது. ஜப்பானுடன் ஒத்துழைக்கிறவர்கள் என்று சொல்லப்பட்ட நபர்கள் இப்பொழுது அவமானம் அடைந்துவிட்டார்கள். எதிரியின் கெட்ட எண்ணத்துக்குட்பட்ட பிரியமில்லாதவர்களும் தங்களுடைய புத்தி பிரமத்தினாலோ அல்லது ஜப்பானின் அருட்டலினாலோ அல்லது கொடுமையினாலோ ஜப்பானுடன் ஒத்துழைத்தவர்களுமான அநேகரைப்பற்றி நாம் கேள்விப்படக்கூடும். ஆகிலும் எவ்வகையிலும் நிலைமையானது ஜப்பானுடையவும் அதன் நண்பர்களுடையவும் பிரசாரர்கள் வெகு காலமாகவும் விடாமுயற்சியுடனும் வர்ணித்து வந்த தோற்றத்திற்கு முற்றிலும் முரணானது.

### எதிரியின் பொய்கள் வெளியாகிவிட்டன.

முதலாவதாக ஜப்பானியர்கள் ஒரு அபத்தமான அடுக்குத்தொடரை வெளியிட்டார்கள். எதிரியின் ஒலிப்பெருக்குகள் மிகைப்படுத்தி வந்த ஆஸாத் ஹிந்துஸ்தான் சேனைக்கும் இந்திய சுதந்திரத்துக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்று ஆதிமுதலே வெளியாகும். இதை ஜப்பானிய நடவடிக்கைகளும் ஊர்ஜிதப்படுத்தியிருக்கின்றன. சட்ட பூர்வமாகவும் உண்மையிலும் அது ஒரு சேனையில்லை. ஏதாவது ஒரு வேலைக்கு ஜப்பான் அமர்த்திக்கொண்ட இந்தியர்களின் சங்கியையை மதித்துச் சொல்ல முடியாது. ஆகிலும் அதை ஜப்பானிய, அச்சு ஒலிப்பெருக்குகள் மிகைப்படுத்தி வெளியிட்டு வந்தன.

மேலும் இந்த சேனைக்கு இந்தியரே தலைவர் என்றும் அவர்கள் நடவடிக்கையைத் துவக்கிவிட்டார்களென்றும் அவர்கள் இந்தியாவுக்குள் வெற்றிகரமாக நுழைந்துவிடுவார்களென்றும் ஜப்பான் சொல்லி வந்தது. முக்கியமாக மணிப்பூர் போரில் நடவடிக்கை பூராவிலும் இந்தியர்கள்தான் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று ஜப்பானிய பிரசாரர்கள் சொல்லி வந்தார்கள். 1944-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 20-ம் தேதியுள்ள ஒரு செய்தி நமது கைவசமாகியிருக்கிறது. அதில் ஜப்பானிய ஜெனரலான முடாகுசி முன்னேறித் தாக்கும் போரில் இந்திய ராணுவம் கலந்துகொண்டதென்று சொல்லவே இல்லை. ஆகிலும் ஜப்பானிய சாம்ராஜ்ய சேனை இந்தியாவைத் தற்காப்பு செய்துவரும் படைகளை அழித்தபின் இந்தியர்கள் ஒத்தாசை செய்வார்கள் என்று மட்டும் அதில் சொல்லப்பட்டிருந்தது.

எதிர்ப்பு பலமாக இராதென்றும் அது பயன்படாதென்றும் சொல்லி ஜப்பானியர்களைத் தூண்டிவிடுவதற்காக இந்த முயற்சி செய்யப்பட்டது. இதற்கு இம்பால், கொஹிமா, மியிட்கினா, மாண்டலே ரெங்கூன் முதலிய இடங்கள் தகுந்த பதிலளிக்கும். உண்மையில் ஜப்பான் இந்தியர்களை முன்னணியில் உபயோகிக்கவே இல்லை. இந்தியர்கள் பின்னணியில் இருந்து முன்னேறும் ஜப்பானியர்களுக்கு உதவி செய்து வந்தார்கள். தற்காப்பு ஸ்தானங்

களிருந்துவரும்படி ஜப்பானியர்களால் கட்டுப்படுத்தப்பட்டாலும் அநேக இந்தியர்கள் சந்தர்ப்பம் வாய்த்தபொழுது நமது கக்ஷிக்கு வந்து உபயோகமுள்ள தகவல்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

## பின்திரை.

சிங்கப்பூர் வீழ்ச்சிபெற்ற 1942-ம்ஞு பிப்ரவரி மாதம் முதல் எதிரி கைதிகளை ஜப்பானுக்கு உதவும்படி தூண்டி வந்தான். மலேயா போருக்குப்பின் ஏற்பட்ட நாசத்தினின்றும் தோன்றிய தாழ்வையும் குழப்பத்தையும் அவர்கள் முதலில் மதித்து விட்டார்கள். அதற்கு உதவியாக ஜப்பானியர்களின் பொய்யான தகவல்கள் தான் அவர்களுக்குக் கிடைத்து வந்தன. இரண்டாவதாக, காட்டுமிராண்டித்தனமான நடத்தைகளின் பலனகள், கீழ்ப்படியாதவர்களை தென்மேற்கு பஸிபிக்கிலும் மற்ற இடங்களிலுமுள்ள தொழிலாளர்கள் முகாம்களுக்கு அனுப்புவது, மற்றவர்களுக்கு வெகுமதி அளிப்பதாக வாக்குறுதிசெய்வது என்ற விஷயங்களையும் கைதிகள் பொருட்படுத்தினார்கள். இங்கிலேயமையில் அநேகர் அடிபணியவில்லையென்பதும், அநேகர்கள் தைரியமாக மறுத்ததும், மற்றவர்கள் எதிரிக்கு உதவுவதுபோல் பாசாங்கு செய்து சமயம் வந்தபொழுது ஏமாற்றியதும் விநதையாக இருக்கிறது.

ராஜீய பிரசாரம் 1942-ம்ஞு ஜூன் மாதத்தில் பாங்காக்கில் நடைபெற்ற கூட்டத்தில் ஆரம்பமாகிற்று. இதை ஜப்பானிய ஒலிபரப்பு ஆடம்பரத்துடன் பகிரங்கப்படுத்தியது. இதன்பின் ஜப்பானிய முறைப்படி கைதிகளும், ஜப்பான் ஆக்கிரமித்திருக்கும் நாடுகளிலுள்ள பொது மக்களும் படைக்கு திரட்டப்பட்டார்கள். அதுமுதல் கிழக்கு ஆசியாவில் இந்தியர்களின் ரகசிய சேனை இருக்கிறதென்று எதிரி அடிக்கடி சொல்லி வந்தான்.

ஒரு வருஷத்திற்குப்பின் நேசதேசத்தாரின் பதில் தாக்குதலினால் ஆக்கிரமிப்பு நாடுகளில் ஜப்பானுக்கு இருந்த பிடிப்பு தளர்ச்சிபெற்று வந்தபொழுது பிரசாரம் அதிகரித்தது. இந்திய சேனையென்றும், ராஜீய சங்கங்கள் என்றும், தாத்காலிக நிர்வாகங்கள் என்றும், மந்திரிகள் என்றும் சேனாதிபதியென்றும் ஜப்பான் சொல்ல ஆரம்பித்தது. இந்திய பாஷைகளில் ஒலிப்பெருக்குச் செய்யப்பட்டது. நாஸிகளுடன் இருந்த சுபாஸ் சந்திரபோஸ் ஜப்பானுக்கு வந்துவிட்டதினால் அதிக லாபம் ஏற்படுமென்று பிரசாரம் செய்யப்பட்டது. "போஸ் மூழ்கிக்கொண்டிருக்கும் கப்பலை விட்டுச் சென்று ஓட்டையுள்ள ஒரு கப்பலுக்குச் செல்லுகிறான்" என்று அப்பொழுது நாம் சொன்னோம்.

## இந்தியாவின் மறுமொழி.

இந்தோ பர்மா எல்லைச்சரகத்தில் வெகுகாலமாக ஜப்பானின் பயமுறுத்தல் இருந்து வந்தபோதிலும் சென்ற வருஷத்தில் மணிப்பூருக்குள் ஜப்பானியப் படைகள் தாத்காலிகமாக நுழைந்தபோதிலும் ஜப்பானின் பலமான பிரசார முறைகள் இந்தியாவில பொதுப்படையான பீதியையும் நம்பிக்கையின்மையையும் உண்டுபண்ணிற்றென்பதில்லை. மேலும் ஜப்பானியர்கள் இந்தியாவின் க்ஷேமத்தைக் கோருகிறவர்கள் என்ற எண்ணமும் இந்தியாவின் பெரும்பான்மையோரிடம் காணப்படவில்லை. பண்டமில்லாமல் எதிரி செய்துவந்த பிரசார முறைக்கு இந்தியா யுத்த முயற்சி இடைவிடாது செய்து பர்மாவில் ஜப்பானின் வெற்றிக்கு உதவியதே தகுந்த விடையாகும்.

இந்தியாவிலுள்ள அதிகார வர்க்கத்தார் ஜப்பானிய ஏஜெண்டுகளாக உள்ள இந்தியர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதென்று அடிக்கடி வெளியிட்டிருக்கிறார்கள். இந்த நடவடிக்கைகள் ஒவ்வொரு நேசதேசத்திலும் கையாளப்பட்டிருக்கின்றன. அநேக இந்தியர்கள் ஜப்பானிடமிருந்து தப்பி இந்தியாவுக்கு வந்து தானாகவே அதிகாரிகளின் முன் தோன்றியிருக்கிறார்கள். அநேகர்கள் போர்முனைகளில் ஆயுதங்களைப் போட்டுவிட்டார்கள். எதிரிக்கு ஒத்தாசை செய்வதுபோல் பாசாங்கு செய்து தங்கள் நாட்டிற்கு அநேகர் வந்து அதற்கு உதவி செய்து வந்திருக்கிறார்கள்.

அவைகளைப்பற்றிய விவரங்கள பத்திரிக்கை உத்தேசித்து வெளியிடப்படுவதில்லை. மேலும் அவைகளை வெளியிட்டால் ஜப்பானியர் வசமுள்ளவர்கள் பேரில் எதிரி கடுமையான நடவடிக்கையை எடுத்துக்கொள்ளக்கூடும். சென்ற வருஷத்தில் நீர்மூழ்கிகள் மூலம் இந்தியாவிலிறங்கின 12 இந்தியர்கள் உடன்காலத்திலேயே அதிகாரிகளிடம் ரிபோர்ட் செய்து கொண்டார்கள். அவர்களில் ஒருவரான ஜமேதார் முகம்மது யூஸப் கான் 1944-ஞு மே மாதம் 21-ம் தேதியன்று அகில இந்தியா ஒலிப்பெருக்கியில் அவனுடைய சொந்த பாஷையில் துயரமும், கதியின்மையுமுள்ள இரண்டு வருஷ ஜப்பானிய ஆக்ஷியைப்பற்றி

சொற்பொழிவாற்றினன். டெக்னிகல் வாரண்டு ஆபீஸரான ஆலார் நூர்கான் அவனும் அவனுடைய இந்தியக் கைதி நண்பர்களும் ஜப்பானியரிடம் அனுபவித்த கொடுமை, அவமானம், மதசம்பந்தமான அக்கிரமம் முதலியவற்றை எடுத்துரைத்தான். ஹவில்தார் ஸயத் முகம்மது பின்வருமாறு சொன்னான்:—"ஜப்பானியர்கள் என்னைப் பிரசாரம் செய்யும்படி அனுப்பினார்கள். அதைத்தான் இப்பொழுது செய்து வருகிறேன். ஆனால் அதில் ஒருவித்தியாசம் உண்டு. ஜப்பானியர் சொல்லச் சொன்னதை நான் சொல்லவில்லை. நான் நேரில் கண்ணுற்றதைச் சொல்லுகிறேன். ஜப்பானியர்கள் இழைத்த அக்கிரமங்களை கண்ணுறாத எவரும் மனிதன் இவ்வளவு கொடூர ஸ்வபாவமுள்ளவனாக இருப்பானென்று நம்பமாட்டார்கள்".

ஜெர்மானியர்களும் இந்தியக் கைதிகளைப் பயன்படுத்திக் கொள்ள முயன்றார்கள். இதாலியில் அச்சு நாட்டார் தயாரித்த இந்திய சேனை நேசதேசப்படைகளை எதிர்த்து போர் புரிய உத்தரவிடப்பட்டபொழுது கலகம் செய்தபடியால் அது கலைக்கப்பட்டது. பிரான்ஸிலும் கைதி முகாம்களிலிருந்து கூட்டப்பட்டு அமைக்கப்பட்ட இந்தியப்படைகள் பிரெஞ்சு கொரில்லாப்படைகளைத் தாக்கும்படி தூண்டப்பட்டபொழுது, சந்தர்ப்பம் வாய்த்தபொழுது மாக்விகளுடன் சேர்ந்துகொண்டு, அபாயத்தையும், கொடிய துன்பத்தையும், மரணத்தையும் அனுபவிக்கத் துணிவு கொண்டார்கள்.

---

## புதுக்கோட்டை ஸமஸ்தான தேசிய யுத்த முன்னணி நிலையத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

### பிரஸங்கம் 251 (4-வது பிரிவு)

| | | | |
|---|---|---|---|
| 11- 6-45 | குடுமியாமலை | ... ,, | 7.00 |
| ,, | பாம்பூர் | ... ,, | 7.30 |
| 12- 6-45 | பெருங்களூர் | ... ,, | 7.00 |
| ,, | ஆதனக்கோட்டை | ... ,, | 7.30 |
| 13- 6-45 | உடையாளிப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | இன்னுகோட்டை | ... ,, | 7.30 |
| 14- 6-45 | அரிமளம் | ... மாலை | 7.00 |
| ,, | ராயவரம் | ... ,, | 7.30 |
| 15- 6-45 | முதலிப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | குருவிக்கொண்டான்பட்டி | ... ,, | 7.30 |
| 16- 6-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, | 6.00 |
| 17- 6-45 | சூரக்காடு | ... ,, | 7.00 |
| ,, | கோட்டைக்காடு | ... ,, | 7.30 |

### பிரஸங்கம் 252 (5-வது பிரிவு).

| | | | |
|---|---|---|---|
| 18- 6-45 | மலைக்குடிப்பட்டி | ... மாலை | 7.00 |
| ,, | கோனாபட்டு | ... ,, | 7.30 |
| 19- 6-45 | குழிபிறை | ... ,, | 7.00 |
| ,, | செவலூர் | ... ,, | 7.30 |
| 20- 6-45 | பனையப்பட்டி | ... ,, | 7.00 |
| ,, | ராங்கியம் | ... ,, | 7.30 |
| 21- 6-45 | கீழாநிலை-புதுப்பட்டி | ... மாலை | 7.00 |
| ,, | கீழாநிலைக்கோட்டை | ... ,, | 7.30 |
| 22- 6-45 | கொடும்பாளூர் | ... ,, | 7.00 |
| ,, | விராலூர் | ... ,, | 7.30 |
| 23- 6-45 | முனிஸிபல் ஆபீஸ் | ... ,, | 6.00 |
| 24- 6-45 | பூவரசகுடி | ... ,, | 7.00 |
| ,, | வேங்கடக்குளம் | ... ,, | 7.30 |

### யுத்தத்திற்கு ஆள் சேர்த்தல்—விளம்பரம்—மாலை 4-மணி.

| | |
|---|---|
| 12— 6—45 | ராமச்சந்திரபுரம். |
| 13— 6—45 | காரம்பக்குடி. |
| 14— 6—45 | கீழாநிலை. |
| 15— 6—45 | புதுக்கோட்டை |
| 16— 6—45 | வெட்டன்விடுதி. |
| 17— 6—45 | விராச்சிலை. |
| 19— 6—45 | கோனாபட்டு. |
| 20— 6—45 | கீழாநிலை-புதுப்பட்டி. |
| 21— 6—45 | ஆலங்குடி. |
| 22— 6—45 | புதுக்கோட்டை. |
| 23— 6—45 | பொன்னமராவதி |
| 24— 6—45 | தீத்தானவிடுதி. |

பிரகிருத யுத்தத்தில் அயல் நாடுகளில் சேவை புரிந்துவரும் இந்திய துருப்புகளுக்கு பொழுது போக்காய் படிக்கக்கூடிய தமிழ் புஸ்தகங்கள் தேவை. தகுதியான பழைய புஸ்தகங்களை இனமாகக் கொடுக்கும்படியாக பொதுஜனங்களை கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவைகளை ஸ்டேட் அச்சாபீஸ் சூபரின்டெண்ட் அவர்களுக்கனுப்ப வேண்டும். அவர் அவைகளைச் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடுவார்

Sri Brihadamba State Press, Pudukkottai. 1,600—11-6-45.